தமிழர் பொருளியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/=   இதழ் - 90   29.12.2024

# அன்னாசி பயிர்ச்செய்கை முறை மற்றும் பயன்கள்



டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான பாதையை வகுத்தல்: இலங்கைக்கான வாய்ப்புகள் மற்றும் சவால்கள் 10

நளினச் செல்லையரும் மறுதாம்பு பயிர்ச்செய்கையும் 19

உயிர்வேலி 17

அதீத நுகர்வின் ஆபத்து 14

பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்

# இலங்கைக்கு வருகின்ற வலசை பறவைகள்

ஊர்வனவற்றிலிருந்து தோற்றம் கொண்ட பறவைகள், மரத்தில் தொற்றி, ஏறிக் கொண்டிருந்த ஆதிப் பறவையான ‘ஆர்க்கியாப்ட்ரிக்ஸ்’ நிலையிலிருந்து, இன்றைய பரிணாம வளர்ச்சியை பெற்றுள்ளன. கண்டங்கள் பிரிந்து, நீர்நிலைகள், காடுகள், மலைகள், பள்ளத்தாக்குகள் உருவான பிறகு சூழலின் தகவமைப்பிற்கு ஏற்ப, நீர்ப்பறவைகளும், மற்றவகை பறவைகளும் பரிணாம வளர்ச்சியை பெற்றிருக்கலாம். வாழும் நிலத்தின் தன்மைக்கேற்ப இடம்பெயர்வதும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே துவங்கியிருக்கலாம்.



### வலசை என்றால் என்ன?

வலசை என்பது, பறவைகளின் உள்தூண்டல், பல்லூழிகால இயல்பூக்கத்தின் அடிப்படையிலேயே நிகழ்வதுடன், பெரும்பாலான பறவைகள் குளிர்கால துவக்கத்தில் உள்தூண்டலால் வலசையை மேற்கொள்கின்றன என ரசிய இயற்கையியலாளர் மன்தேய்பெல் குறிப்பிடுகிறார்.

உயிரினங்களுக்கு தாங்கள் வாழும் நிலங்களிலுள்ள இருப்பிட சிக்கல், கடுமையான தட்பவெப்ப நிலை, உணவு பற்றாக்குறையை தவிர்க்க, தங்கள் தாய்நிலங்களிலிருந்து, வாழும்சூழல் நிறைந்த இடங்களுக்கு சென்று, திரும்பி வருவதை, ‘வலசை போதல்’ (Migration) என்று பறவையியலாளர்கள் அழைக்கின்றனர். பெரும்பாலான மேற்குலக நாடுகள் குளிர்காலத்தில் பனியினால் மூடப்படும் போது, உணவு பற்றாக்குறையை தவிர்க்க, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கு பறவைகள் இடம்பெயர்கின்றன. இவைகளை, ‘வலசை பறவைகள்’ என சுட்டுகின்றனர். வலசை சென்றாலும், இனப்பெருக்கத்தை தங்கள் தாய் நிலங்களிலேயே மேற்கொள்கின்றன. இதனை தமிழகத்தின் பசுமை இலக்கிய முன்னத்தி ஏரான தியடோர் பாசுகரன், ‘முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் இடமே, ஒரு பறவைக்கு ‘தாய் நிலம்’ என குறிப்பிடுவார்.

பழந்தமிழர் பாடல்களில் வலசை பறவைகள்

பறவைகள் ‘வலசை’ செல்வதை இன்றைய அறிவியலுலகம் ஆய்வுசெய்துக் கொண்டிருக்க, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பழந்தமிழர்கள் ‘பறவைகளின் வலசை’யை அறிந்துள்ளனர். பழந்தமிழ் நூல்களில் ‘வலசை’ போவதை ‘புலம்பெயர் புள்’ என்றும், ‘வம்பப் புள்’ என்றும் அழைத்துள்ளனர்.

**‘பரியுடை நற்றேர்ப் பெரியன் விரியினர்ப்**
**புன்னையன் கானற் புறந்தை முன்றுறை**
**வம்ப நாரை யின்னெலித் தன்ன**
**அம்பல் வாய்த்த தெய்ய தண்டிலர்’**
- அகம் 100

பொறையாற்றில் கடற்கரை முற்றத்திலிருந்து புன்னைக் கானலில் வம்ப நாரை இனமாக இருந்து ஒலித்ததாக அகநானூறு கூறியுள்ளது. விருந்து என்ற சொல் புதுமை என்றும், வம்பு என்ற சொல் நிலையின்மையைக் குறிப்பதாக தொல்காப்பியம் கூறுகிறது.

இதில் குறிப்பிடப்படும் வம்ப நாரை, செங்கால் நாரையாக இருக்கலாம் என பி.எல். சாமி தனது ‘சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்’ (1976) நூலில் குறிப்பிடுகிறார். White Stork என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் ‘செங்கால் நாரை’ ஐரோப்பாவிலிருந்து மிகக் குறைந்த எண்ணிக்கையில் தமிழகத்திற்கு குளிர்காலத்தில் வலசை வரும் பறவையாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதை,

**நாராய், நாராய், செங்கால் நாராய்,**
**பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**
**பவளக் கூர்வாய் செங்கால் நாராய்!**
**நீயும் நின்பெடையும் தென்திசைக் குமரிஆடி**
**வடதிசைக்கு ஏகுவீர் ஆயின், எம்மூர்**
**சத்திமுத்தம் வாவியுள் தங்கி**

நீண்ட சிவந்த கால்களையும், பனங்கிழங்கை ஒத்த அழகிய அலகை கொண்ட செங்கால் நாரையையே (White Stork), சத்தி முத்தப் புலவர் வர்ணிக்கிறார் என்பது புலப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் இருந்து வலசை வருவதாக அறியப்பட்டுள்ள செங்கால் நாரையை, சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பே கூர்ந்து அவதானித்து தொல் தமிழன் பாடியுள்ளது பிரமிக்க வைக்கிறது.

குமரி அம் பெருந்துறை ஆயிரை மாந்தி
வடமலைபெயர்குவைஆயின் புறம்67

குமரியில் உள்ள நீர்நிலைகளில் இருந்து வடதிசை நோக்கி செல்லும் பூநாரைகள் குறித்து புறநானூறு பாடல் குறிப்பிடுகிறது. குசராத்திலுள்ள ராணா–கட்ச், ஒடிசாவிலுள்ள சில்கா ஏரிகளில் இனப்பெருக்கம் செய்து விட்டு, அக்டோபர்–நவம்பர் மாதங்களில் தமிழகத்தின் பழவேற்காடு, கோடிக்கரை, கூந்தங்குளம் போன்ற பறவைகள் காப்பிடங்களுக்கு வலசை வரும் பூநாரைகள் குறித்து, பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பாக இயற்றப்பட்ட புறநானூற்றில் கூறப்பட்டிருப்பது வியப்பை தருகிறது.

பழந்தமிழர்களின் நூல்களில் காட்டுயிர்கள், இயற்கைக்கு அணுக்கமாகவும், உண்மையாகவும் நிறைய செய்திகள்



பதிவு செய்யப்பட்டுள்ளன. நேரெதிராக, இன்றைய நவீன தமிழ் இலக்கியத்தில் கற்பனையும், எதிர்மறை கருத்துக்களும், புரிதலற்ற தன்மையும் பெரும்பான்மையாக உள்ளது. இது காட்டுயிர்களுக்கும், நவீன இலக்கியவாதிகளுக்குமுள்ள இடைவெளியை வெளிப்படுத்துகிறது.

காப்பிடங்களுக்கு வருகை தரும் பறவைகள் அனைத்தும் வலசை பறவைகளா?

தமிழகத்திலுள்ள வேடந்தாங்கல், கரிக்கிளி, பழவேற்காடு போன்ற பறவைகள் காப்பிடங்களுக்கு வருகை தரும் மஞ்சள் மூக்கு நாரை, அரிவாள் மூக்கன், சின்ன கொக்கு, கூழைக்கடா, நததைக் குத்தி நாரை, வக்கா அல்லது இராக் கொக்கு, நீர்க்காகம் போன்ற பறவைகள் கூடமைத்து, இனப்பெருக்கம் செய்வதால், இவற்றுக்கு தமிழகமே 'தாய் நிலம்' எனலாம். இவைகள் தமிழகத்தில் இனப்பெருக்கம் செய்து விட்டு கோடையில் உணவு தேடி மற்ற இடங்களுக்கு சென்று விட்டு, குளிர்காலத்தில் தாய் நிலங்களுக்கு திரும்புகின்றன.

குசராத், ஒடிசாவிலிருந்து தமிழகத்திற்கு குளிர்காலத்தில் வருகை தரும் பூநாரைகள் 'உள்ளூர் வலசை பறவை'களாகவும், ஐரோப்பா, ரசியா, இமயமலை பகுதிகளில் இருந்து வரும் பட்டை தலை வாத்து, ஆலாக்கள், உப்புக் கொத்திகள், உள்ளான்கள், நாரைகள் போன்றவைகள் 'வலசை பறவை'களாக அறியப்படுகிறது.

வலசை உயிரினங்கள்

வலசை என்பது பறவைகளிடம் மட்டுமல்லாமல், ஆப்பிரிக்காவில் காணப்படும் "Wild Beast" எனப்படும் 'நூ' என்ற காட்டெருதுகளும் லட்சக்கணக்கில் இடம் பெயர்கின்றன. தான்சானியாவின் செரங்கிட்டி தேசிய பூங்காவிலிருந்து, கென்யாவின் மசைமாரா காப்பிடத்திற்கு 320 கி.மீ., தூரத்தை நூக்கள் (Wild Beast) கடக்கின்றன. சிங்கம், சிறுத்தை, சிவிங்கி உள்ளிட்ட வேட்டையாடிகளின் ஆபத்துக்கள் இருப்பினும் நூக்கள் வலசை செல்கின்றன. சூன் மாதத்தில் துவங்கும் வலசை பாதையின் இடையில் மாரா என்ற பெரிய ஆற்றை கடக்கையில் முதலை, கழுதைப் புலிகள், நரிகள், பிணம் தின்னிக் கழுகுகள் போன்ற வேட்டையாடிகளையும் கடந்து செல்ல வேண்டிய அபாயம் உள்ளது.

கருப்பு கலந்த அடர் பழுப்பு நிற உடலில், பெரிய தலையும், வாயின் கீழ்ப்பகுதியில் வளர்ப்பு ஆடுகளுக்கு உள்ளது போன்ற சிறு தாடியும், குட்டையான உடலையும் நூக்கள் பெற்றுள்ளன. வலசை பாதையிலேயே குட்டி ஈனுவதும், சிங்கம் போன்ற வேட்டையாடிகளுக்கு உணவாக மாறுவதும் நிகழ்கிறது. ஒரு தொகுப்பிற்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நூக்கள் திரண்டு, பல தொகுதிகளாக, சுமார் 20 லட்சம் காட்டெருதுகள் வலசை செல்வது பேரதிசயங்களில் ஒன்றாகவே இயற்கையியலாளர்களால் அவதானிக்கப்படுகிறது. மசைமாராவில் தங்கியிருக்கும் நூக்களுக்கு 'இயற்கையின் அழைப்பு' வந்தவுடன் அக்டோபர் மாதத்தில் தாய் நிலம் நோக்கி திரும்பத் தொடங்குகின்றன.

நூக்கள் எனப்படும் காட்டெருதுகளின் பயணத்தில் சில ஆயிரம் வரிக்குதிரைகளும் வலசை பயணத்தில் கலந்து கொள்வது ஆச்சரியமான ஒன்றாக உள்ளது. லட்சக்கணக்கில் திரண்டு வலசை செல்லும் நூக்களின் அழகிய பயணத்தை காண உலகத்தின் பல்வேறு நாடுகளில் இருந்து ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் ஆப்பிரிக்கா நோக்கி பயணிக்கின்றனர்.

நூக்கள் தவிர, Monarch Butterfly எனும் வண்ணத்துப் பூச்சி கனடாவில் இருந்து கலிபோர்னியா, மெக்சிகோ வழியாக அமெரிக்காவிற்கும், றீழழியியிலிழவீழிஷ்யி வண்ணத்துப் பூச்சிகளில் ஒரு வகை இந்தியாவிலிருந்து 10 கி.மீ., வேகத்தில் 2000 கி.மீ., தூரம் பறந்து இலங்கைக்கு வலசை செல்கின்றன.

நாகணவாய் குடும்பத்தை சார்ந்த சூரமாறிகள் (Rosy Starling) இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு குளிர்காலத்தில் வலசை வருகின்றன. சூரமாறிகள் குளம், குட்டை, ஏரி, ஆறு என்று நீர்நிலைகள், பரந்த புல்வெளிகளில் கூட்டமாக வாழக் கூடிய இயல்புடையது. மாலை நேரத்தில் கூட்டமாக பறக்கும் போது இடமும், வலமும் மாறி, மாறி பறந்து பார்ப்பவரை வியப்பில் ஆழ்த்தும். விளைநிலங்களில் சோளம் உள்ளிட்ட மற்ற பயிர் வகைகளுக்கு தீங்கு ஏற்படுத்தினாலும், விளைநிலங்களுக்கு மிகப் பெரிய எதிரியாக இருக்கக் கூடிய வெட்டுக் கிளிகளை உண்டு விவசாயிகளுக்கு நன்மை செய்கின்றன. கோடிக்கரையில் ஊசிவால் வாத்துகளின் கூட்டத்தையும், பவழக்கால் உள்ளான்களின் எழில்மிகு பறப்பையும் கண்டு இரசித்தப்படி, ஒளிப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்த எங்களுக்கு

தொடர்ச்சி 12ம் பக்கம்....

**மின்மடல் :** tamilseconomy@gmail.com
**தொலைபேசி :**+94(77)2034807 +94 (77) 776 9751

# கனடா குடியுரிமை

**கனடா குடியுரிமை விதிமுறையில அந்நாட்டு அரசாங்கம் சில மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அதன்படி நியமன கடிதத்துக்கான மதிப்பெண்கள், இனி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே விண்ணப்பித்துள்ளோர் மற்றும் காத்திருப்போருக்கு பொருந்தாது என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றபோதும்,**

**போலி உத்தரவு கடிதங்கள் மூலம் பலர் விண்ணப்பிப்பதால், மோசடிகளை தடுக்க, பணி உத்தரவு கடிதங்களுக்கான மதிப்பெண்களை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளதாக கனேடிய அரசு தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

**இந்த உத்தரவால் கனடாவில் தற்போது தற்காலிகமாக பணியாற்றும் மற்றும் பணியாற்றுவதற்கான பணி உத்தரவு பெற்றுள்ளவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம்.**

**இதுகுறித்து கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் மார்க் மில்லர் கூறும்போது, ஹநமது பொருளாதாரத்திற்குத் தேவையான திறமையாளர்களை ஈர்க்கும் அதே வேளையில், மோசடியைக் குறைப்பதற்கு முக்கியமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.**

**கனடாவின் வெற்றிக்கு குடியேற்றம் எப்போதுமே ஒரு மூலக்கல்லாக இருந்து வருகிறது. கனடாவிற்கு சிறந்த மற்றும் பிரகாசமானவற்றை வரவேற்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம், இதன் மூலம் அனைவருக்கும் தரமான வேலைகள், வீடுகள் மற்றும் அவர்கள் செழிக்கத் தேவையான ஆதரவைப் பெறலாம்' என்றார்.**

**என்னதான் மாற்றங்களும் திட்ட முறைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் வெளிநாட்டுக்குக்கனவோடு கனடாவிற்கு செல்வதற்காக சற்றும் மனம் தளராத விக்ரமாதித்தனை போல முயற்சித்துக்கொண்டே இருக்கிறார்கள். காலங்களில் ஏற்படுகின்ற மாற்றம் சிலவழிகளில் கனடா கனவுகளை நிறைவேற்றலாம் 2025 இல் நல்ல மாற்றங்களை எதிர்பார்ப்போம்.**

# வீட்டுப்பொருளாதாரம் -இயற்கை உரம்

பூரணி

ஒவ்வொருநாளும்நமதுவீட்டிலிருந்து வெளிவரும் கழிவுகள் அதாவது மொத்தமாக வீட்டுக் கழிவுகள் (குப்பைகள்) என்று பார்த்தால் அதில் 80 முதல் 90 விழுக்காடு சமையலறை கழிவுகளாக தான் இருக்கும். சராசரியாக நான்கு பேர் உள்ள குடும்பத்தில் நாளொன்றிற்கு 400 முதல் 500 கிராம் வரையிலான சமையலறைக் கழிவுகள் வெளிவருகிறது. சராசரியாக ஒருவர் உட்கொள்ளும் உணவில் 10 முதல் 30 சதவீதம் கழிவுகளாக வெளிவருகிறது. இந்தகழிவுகள் மண்ணுக்குமட்டுமல்ல சுற்றுச்சூழலுக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய பொன்னான கழிவுகள். இந்த கழிவுகளை கொண்டு பலவகையான சத்துமிகுந்த உணவை நாமே வீட்டில் பெற்றுக்கொள்ளலாம்.



வீட்டில் இருந்து வெளிவரும் கழிவுகள் பட்டியலை முதலில் பார்ப்போம். அதுயென்ன பட்டியல் என்கிறீர்களா.. ஒவ்வொரு குடும்பத்திலும் அன்றாட சமையலில் பயன்படுத்தப்படும் காய்கறி, கீரைகள் ஆகியவற்றின் தேவையில்லாத பாகங்கள் அதாவது சமைக்க பயன்படுத்தாத பாகங்கள் மற்றும் பழங்களின் தேவையில்லாத பாகங்களை பார்ப்போம்.

உதாரணத்திற்கு வெங்காயத்தில் இருக்கக்கூடிய வெளித்தோல் பூண்டு தோல், காய்கறிகளின் முனைகள் அதாவது வெண்டைக்காயின் இருமுனைகள், கத்திரிகையின் காம்பு, பூசணிக்காய், பரங்கிக்காய் போன்ற காய்களின் மேல் தோல், விதைப்பகுதி, வாழைப்பூ மடல்கள், கீரைகளின் தண்டுகள் போன்றவைகளும் பழங்களில் வாழைப்பழத் தோல், பப்பாளிப் பழத்தோல், கொட்டைப் பகுதி, ஆரஞ்சு பழத்தோல், சக்கைகள், மாதுளம் தோல், தேங்காயின் குடுமி, நார் போன்றவைகளாகும்.

இப்படி சேரும் சமையலறைக்கழிவுகள் மிக அதிகம். அதிலும் பழங்களை அனைவரும் விரும்பி உண்கிறோம். இந்த பழக்கழிவுகள்காய்கறிக்கழிவுகளைவிடஅதிகமாக கிடைக்கும். உதாரணத்திற்கு ஒரு சாத்துக்குடியைஎடுத்துக்கொள்வோம். அதிலிருக்கும் உட்பகுதியை உண்டுவிட்டு பார்த்தால் வெளிப்பகுதிதான் அதிக எடைகொண்டிருக்கும்.

வேறுஎந்தபிரத்தியேகசெலவுமின்றி இந்த கழிவுகளை வைத்துக்கொண்டு தரமான உரத்தை தயாரிக்க முடியும்.

உரம் தயாரிக்க தேவையான பொருட்களில் முக்கியமானது. மண்ணாலான குவளைகள் அல்லது வீட்டில் இருக்கும் ஏதேனும் ஒரு பழைய வாளியை எடுத்துக் கொள்ளலாம்.

கடைகளில் கிடைக்கும் மண்குவளைகளின் அடிப்பகுதியில் வலைப்பின்னல் இருக்கும். அவற்றை அவ்வாறே பயன்படுத்தலாம். வீட்டிலிருக்கும் பழைய பொருட்களை பயன்படுத்தும்பொழுது அதன் அடியில் ஒரு சென்டிமீட்டர் அளவில்

தொடர்ச்சி 18ம் பக்கம்....




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,04,850 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,23,450 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** இயற்கை முறையில் ஜீவாமிர்த கரைசலை தயாரிப்பது எப்படி?

சண்முகநாதன் சரவணன்
முள்ளியவளை
முல்லைத்தீவு

**பதில்:** நாட்டு பசுஞ்சாணம் 10 கிலோர் கோமியம் 5 முதல் 10 லிட்டர், வெல்லம் 2 கிலோ, துவரை, கொள்ளு,



கொண்டைக்கடலை, உளுந்து பயறு ஏதாவது ஒன்றின் மாவு 2 கிலோ, நிலத்தின் மண் கையளவு, குளோரின் கலக்காத தண்ணீர் 200 லிட்டர்.

பெரிய தொட்டியில் 200 லிட்டர் தண்ணீருடன் அனைத்தையும் சேர்க்க வேண்டும். தினமும் 3 முறை வீதம் 3 நாட்களுக்கு கலக்கவேண்டும். கரைசலின் மேற்புறத்தில் இருக்கும் தெளிந்த நீரை எடுத்து வடிகட்டி பயிர்களுக்கு பயன்படுத்த வேண்டும்.

இந்த கரைசலில் 2 மணி நேரம் விதைகளை ஊறவைத்து விதைநேர்த்தி செய்யலாம். நாற்றுகளின் வேர்களை நனையவிட்டு எடுத்து நடவு செய்ய வேண்டும். ஜீவாமிர்தத்தை நீரில் கலந்து பயன்படுத்தும் போது மண்புழுக்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறது. வேர் அழுகல், வேர்க்கரையான், வேர்ப்புழு



நோய்கள் தடுக்கப்படும். மண்வளத்தை மேம்படுத்தும்

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94(77)2034807**
**+94 (77) 776 9751**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 320/= |
| உருளைக்கிழங்கு | 340/= |
| பச்சை மிளகாய் | 300/= |
| தக்காளி | 380/= |
| மரவள்ளிக்கிழங்கு | 300/= |
| கோவா | 280/= |
| கரட் | 290/= |
| வாழைக்காய் | 260/= |
| சின்ன வெங்காயம் | 300/= |
| பாகற்காய் | 360/= |
| வெண்டிக்காய் | 200/= |
| பயற்றங்காய் | 180/= |
| பீற்றூட் | 220/= |
| முருங்கைக்காய் | 400/= |
| தேங்காய் | 160/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 207/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 313/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர்டொலர் - | 219/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 374/= |
| சுவிஸ் பிராங் - | 331/= |
| அமெரிக்க டொலர் - | 289/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 325/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 227/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 346/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

# கதையல்ல நிஜம்

**இப்போது குணவதி நான்கு பெண் தலைமைத்துவ குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் ஒரு முதலாளியாக இருக்கிறார். அவரது பெயர் சொல்லும் உற்பத்திகள் ஆகியவற்றை உருவாக்கும் அடுத்த கட்ட தொழில் சிந்தனையோடு இருக்கும் குணவதி போன்ற அநேகம் பெண்கள் இருக்கிறார்கள்.**

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

பெற்றோல் தட்டு பாடான காலத்திலை ஒருநாள் வீட்டம்மா விடியவே கத்த வெளிக்கிட்டா. தும்புத் தடியும் கையுமா நிண்டு கொண்டு உங்க எல்லா இடங்களிலையும் பெற்றோல் குடுக்கினமாம். போய் அடிக்கிறதை விட்டுப்போட்டு இன்னும் என்ன குறட்டை விட்டுக்கொண்டு இருக்கிறியள்.

கெதியாத் தேத்தண்ணியை ஊத்திப்போட்டுப் போயப் பெற்றோல் வாங்கிற அலுவலைப்பாருங்கோ எண்டா. இதென்னடா பிரகண்டமாப் போச்செண்டு போய் வரிசையில ஒரு மூண்டு மணித்தியாலங்கள் நிண்டு ஒரு மாதிரி பெற்றோலை அடிச்சுப் போட்டு என்ர பெடிக்கும் போன் பண்ணிச் சொன்னன் பெற்றோல் கிடக்கடா வந்து அடியடா எண்டு. அவன் தனக்கு உப்பிடி மணித்தியாலக்கணக்கா நிக்கேலாது எண்டு மாட்டன் எண்டு போட்டான்.

ஆச்சி சொல்லிற மாதிரி வரிசை எண்டது எங்களுக்கு ஒண்டும் புதுசு கிடையாது. சிறிமா காலத்தில விடிய நாலு மணிக்கே எழும்பிப்போய் சங்கக் கடையில கூப்பனை அடுக்கிக் காவல் இருந்து பாண் வாங்கி இருக்கிறம். அத மாதிரி வரிசையில நிண்டு காட்டுக்கு சிந்தன்டிக் துணி அதாவது சீலை கால்சட்டை சேட்டுத்துணி எல்லாம் வாங்கி இருக்கிறம். அன்னதான மடங்களிலையும் வரிசையில நிண்டு வாங்கித்திண்டிருக்கிறம்.

அன்னதான மடத்தில என்னதான் வரிசையில நிண்டாலும் அன்னதான மடச்சபை உறுப்பினர் ஆரையுந்தெரிஞ்சா வரிசையில நிக்காமப் பின்னால போயும் வாங்கித்தின்னலாம்.

ஆனால் கோயில்லை ஐயர் வீபூதி சந்தனம் தீர்த்தம் குடுக்க வரிசையில நிக்காம தள்ளுப்பட்டு இடிபட்டு முட்டுப்பட்டு நிண்டு வாங்கி இருக்கிறம். வேறை ஒண்டும் இல்லை இப்பிடி வாங்கினால் தான் டக்கெண்டு முத்தி பெறலாம் எண்டு ஒரு நம்பிக்கை. பேந்து சண்டை நடக்கேக்கை வவுனியாவுக்கு வாறுதுக்கு பாஸ் எடுக்க வரிசையில நிண்டு இருக்கிறம். பேந்து ஓமந்தை தாண்டிக்குளம் வந்து வவுனியாவுக்கு உள்ளை வர பாஸ் எடுக்க எண்டு வரிசையில நிண்டு இருக்கிறம். வவுனியா வந்த பிறகு வவுனியாவைத்தாண்டி மற்ற இடங்களுக்கு போறதுக்கு பாஸ் எடுக்க வரிசையில நிண்டு இருக்கிறம்.

அதுமாதிரி வவுனியாவுக்கு இஞ்சால இருந்து வவுனியாவுக்குள்ளை போகவும் பேந்து வவுனியாவில இருந்து அங்கால வடக்கால உள்ளுக்குப் போக பாஸ் எடுக்க எண்டும் வரிசையில நிண்டு இருக்கிறம்.

உப்பிடிப் பாஸ் எடுக்க நிக்கேக்கை ரெண்டு பக்கத்து புலனாய்வாளர்களும் பாக்கிற பார்வையையும் கேக்கிற கேள்வியையும் சமாளிக்கிறது எண்டது ஒரு பெரிய கலை. சில வேளை உந்தப் பாஸ் எடுக்க நாள்க்கணக்கிலயும் மினக்கெட்டிருக்கிறம்.

பிணைவைச்செல்லாம் எடுத்திருக்கிறம். உதை மாதிரி

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1.வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.
2.சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.
3.கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.
4.ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.
5.நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1.பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2.இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.
3.அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.
4.திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
5.கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94(77)2034807 | +94 (77) 776 9751**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

# வாழ்வும் வளமும்

## பார்வை 18



தமிழ்க்கவி



இந்த முறிகண்டிப்பிள்ளையாரின் பேரும் புகழும் ஒருகாலத்தில் மிக பயங்கரமாக பேசப்பட்டது. பயணிகள் எவராயினும்அதில்இறங்கிபிள்ளையாரை வழிபட்டபின்னரே பயணத்தை தொடருவார்கள் அப்படிசெய்யாது போனால் அவர்களது பயணத்தில் இடையூறு ஏற்படும் என்ற நம்பிக்கை (நடப்பதும் உண்டு) இருந்தது. இந்தக்காலத்தில் கால்நடைப்பயணமே நடைமுறையிலிருந்ததால் யானைகளுக்கா பயந்தவர்கள் அந்த காட்டுப்பிள்ளையாரை கொண்டு வந்து புதிதாக போடப்பட்ட கற்பாதையான ஏ9 பாதையோரமாக வைத்தார்கள். உள்ளே சென்று வழிபட நேரம் அதிகமாகும் எனவே இந்த இடத்தில் வழிபட்டபின் பயணத்தை தொடர்ந்தனர்.

ஆயிரத்து எண்ணூற்று எண்பது களில்தான் பிரித்தானியர்களுக்கு தமது செலவினங்களைகட்டுப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டது. பொருட்களை செல்வத்தை அள்ளிக் கொண்டு போய் தமது மண்ணை வளமாக்குவதாக நினைத்துக் கொண்டு தாம் ஆள நினைத்த பிரதேசங்களை அல்லது நாடுகளை முற்றாக தங்களிலேயே தங்க வைத்திருப்பது உறுத்தியது. இதற்கு மேலிடத்திலிருந்து வந்த அழுத்தமே காரணம்.

வீதிகள் அமைக்கவும், கட்டடங்கள் கட்டவும் தமக்கான பொதிகளை சுமக்கவுமாக ஏராளமான சுதேசிகளை வேலைக்கு அமர்த்தியவர்களால் அவர்களுக்கான சம்பளத்தை பணமாகவோ, அல்லது மாவு, சீனி, பருப்பு போன்ற இதர உணவுப் பொருட்களாலேயோ நிரப்ப வேண்டியிருந்தது. மாதாந்தம் ஒவ்வொரு பொதுமக்களும் பதினாலு நாட்கள் அரசாங்க வேலைகளில் ஈடுபட்டே ஆகவேண்டும்என்றமுறைமைஇருந்தது.

வேலைகள்ஓய்ந்துகொண்டுபோகும் தருவாயில் அவர்களுக்கு வழங்கப்பட்ட ரேஈன் பங்கீட்டு அட்டைகள் செயலில் இருந்தன. எனவே அந்த உணவுப் பொருட்களை இறக்குமதி செய்தாவது விநியோகிக்க வேண்டியிருந்தது. ஆகவே உள்;ர் உற்பத்திகள்பற்றி அதாவது அவர்களுடைய வருகைக்கு முன்னரான காலத்தில் மக்கள் எதை உண்டு வாழ்ந்தார்கள் என்பதனை ஆய்வு செய்தபோது, விவசாயம்பற்றி அதாவது நெற்செய்கையின் அவசியம் தெரிய வந்தது. நெற்செய்கைக்காக நீர் தேவைப்படும். இந்த நீர் மழையினால் பெறப்பட்டு குளங்களில் சேமிக்கப்பட்டவைதான் எனவும் கண்டார்கள்.

இப்போதுள்ள ஆய்வாளர்களை அனுப்பி அத்தகைய இடங்களை சுற்றிப்பார்த்து அடையாளம் காட்டும்படி கேட்டிருந்தார்கள.; அதன்படியே சென்ற ஆய்வாளர்கள் பார்வையில் வன்னிக்காடுகளுள் உடைப்பெடுத்து கவனிக்காமல்விடப்பட்டபலகுளங்களும் அதன்கீழ் பயிர் செய்யத்தக்கதான வயலுக்கானநிலங்களும்காணப்பட்டன. அவை காடுகாளாகியிருந்தன. அந்தக்குளங்களின் கீழ் விவசாயம் செய்வதன்மூலம் பல குடும்பங்கள் தமக்கான வாழ்வாதாரத்தை தேடமுடியும் எனக்கணித்தார். அந்தக்குளங்களின் கீழானகாணிகள்வயல்நிலப்படுகைகளும் காடாகியிருந்தமை தெரிய வந்தது. புதிதாக நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்கி அதில் விவசாய முயற்சிகளை மேற் கொண்டால் அரசாங்கத்தின் செலவுகளை குறைப்பதுடன் நாடும் வளம் மிகுந்ததாக மாறும் எனக்கண்டவர்கள் அதற்கான திட்டங்களை வரையறுத்தாலும்துரதிர்ஸ்டவசமாகவோ நல்லதிர்ஸ்டவசமாகவோ நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது. எனினும் உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகள் தொடர்ந்ததால் காடுகள் களனியாக மாறின அப்படி மாற்றம் பெற்ற குளங்களைப்பற்றி நாம் பார்த்து வருகிறோம்.

இன்று முறிகண்டிக் குளத்தை காணலாம். முறிகண்டியில் குளமா? ஏன வியந்தால் தெருவோரமாக ஒரு குட்டைபோல இருக்கும் சிறு குளத்தைப்பற்றி நீங்கள் கருதலாம். ஆனால் பழைய முறிகண்டி பற்றிய கதையை பார்க்காதவர்களுக்கு அது முடிபாகும்.

கொக்காவில் என்ற இடத்திலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் சாலையில் சுமார் ஆறு ஏழு கிலோமீட்டர் கடக்கும் போது வடக்கு தோக்கித்திரும்பும் ஒரு கிரவல் வீதி தெரியும் மிகவும் ஆழமாக காட்டுக்குள் செல்கிறது அது. அதில் திரும்பி நீங்கள் நான்கு கிலோமீட்டராவது சென்றால், ஒரு கிராமம்



வரும். புழைய முறிகண்டி என்பது இந்தக்கிராமத்தின் பெயராகும். புதிதாக இரண்டு முறிகண்டிப்பிள்ளையார்கள் உருவானதால் இது தன் பெயருடன் பழைய என்ற சொல்லை அடக்கிக் கொண்டிது. கிராமத்தை அடையுமுன்பேபிள்ளையார் கோவிலை காணலாம். அந்த பிள்ளையார்தான் முழுமையான தலைமைப்பிள்ளையாரான முறிகண்டிப்பிள் ளையார். இவரது பிரதிமைகளாக ஆன கோவில்கள்தான் ஏநைன் வீதியின் மருங்கில் கிடப்பனவாகும்.

அதனை அடுத்து கிராமமும் பாடசாலையும் குளத்து வான்கட்டில் ஏறிக்கடந்தால் தெரியும.; இந்த அத்துவானக்காட்டிலிருந்து மக்கள் விவசாயம் செய்கிறார்கள் வளமான வயல்நிலங்கள் இங்கே பரந்து விரித்திருக்கின்றன. பெரிய குளம் சுமார் நூறுஏக்கருக்குமேல்நீர்பாயும்இதற்கான நீர்வரத்து மேலே மருதன்குளத்திருந்தும் ஐயன்கண்குளத்தினதும் மேலூறலுடன் மழை க்காலங்களில் பெருகும் சிற்றாறுகளும் உதவுகின்றன. தோட்டச்செய்கையும். புழமரங்களும் கால்நடைகளும் பெருகியுள்ளதுஇங்கு. இந்தபாடசாலையை அடுத்து ஒரு தபாற்கந்தோரும் உள்ளது. கிராமசேவகர் அலுவலகமும் உண்டு. அந்த கிராமத்தை கடந்தும் அந்த வீதி நாரியை வளைத்துக் கொண்டு பயணம் செய்கிறது. எங்கே போகிறது என்றால் அது ஊற்றுப்புலம் வழியாக கிளிநொச்சி கந்தபுரம் வீதியை தொடுகிறது. மிக சுருக்கமானபாதை. ஆனால்பெரும்பாலும் அதை யானைகளே பயன்படுத்துவதால் மக்கள்பிழக்கம் குறைவு. பெரும்பாலான கிராமவாசிகள் கடைகளே இல்லாத இந்த ஊரிலிருந்து கால்நடையாகவே பல மைல்களைக்கடந்து வெளியே போய் வருகிறார்கள் என்றால், இவர்களுக்கு பணத்தேவையும் குறைவுதான். நாலாபுறமும் பனைமரங்களும் இயற்கை வேலியும் மண்விடுகளும், திருஸ்டி வைத்தாற்போல இரண்டொரு கல்வீடுகளும் உள்ளன.

இந்த முறிகண்டிப்பிள்ளையாரின் பேரும் புகழும் ஒருகாலத்தில் மிக பயங்கரமாக பேசப்பட்டது. பயணிகள் எவராயினும்அதில்இறங்கிபிள்ளையாரை வழிபட்டபின்னரே பயணத்தை தொடருவார்கள் அப்படிசெய்யாது போனால் அவர்களது பயணத்தில் இடையூறு ஏற்படும் என்ற நம்பிக்கை நடப்பதும் உண்டு இருந்தது. இந்தக்காலத்தில் கால்நடைப்பயணமே நடைமுறையிலிருந்ததால் யானைகளுக்கா பயந்தவர்கள்அந்தகாட்டுப்பிள்ளையாரை கொண்டு வந்து புதிதாக போடப்பட்ட கற்பாதையான ஏ9 பாதையோரமாக வைத்தார்கள். உள்ளே சென்று வழிபட நேரம் அதிகமாகும் எனவே இந்த இடத்தில் வழிபட்டபின் பயணத்தை தொடர்ந்தனர். காலப்போக்கில் அக்காரயன் பகுதியிலிருந்து சுண்டிக்குளம் வழியாக யாழ்ப்பாணம் பயணிப்பவர்களும் கரையோரமாக திருகோணமலைக்கு போவோரும், பெரும்பாலும் மாட்டுவண்டிகளிலோ குதிரையிலோ செல்லும்போது அக்கராயனிலிருந்துயாழ்ப்பாணப்பக்கம் திரும்பும்போது சந்தியிலுள்ள பாலைமரத்தடியில் ஒரு கல்லை வைத்து முறிகண்டிப்பிள்ளையாராக கருதி வழிபட்டபின் சென்றார்கள் அவ்விடத்தில் இளைப்பாறநிழலும் இருந்ததால் அங்கே குளித்து தமது உணவை சமைத்துண்ட பின்னர் பயணித்தனர். சுமார் ஆயிரத்து தொளாயிரத்து நாற்பதுகளில் அந்த இடத்தில் முதல்முதலாக ஒரு உணவு விடுதி ஆரம்பித்தார் ஒருவர். அந்த கடை வெகுகாலமாக இலங்கையின் எப்பாகத்திலிருந்து வருவோருக்கும் பயனளித்தது. அவரே அந்த முறிகண்டிப்பிள்ளையாருக்கு ஒரு சிலையை வடிப்பித்தார். அது மிகவும் அற்புதமான உணர்வை பிரதிபலித்தது. நாங்கள் வேறிடங்களில் பார்க்கும் விநாயகர் போலல்லாது அந்த முகத்தில் ஒரு ஆங்காரமான பார்வை இருந்தது. எனினும் வேண்டியவர்களுக்கு வேண்டியதை அருளும் அதீத சக்தி அந்த கோவிலுக்கு இருந்தது.

படிப்படியாக கோவிலுக்கு பூசகர் மாறி பிராமணர் வந்தார். கடைகள் ஒன்று என்பது மாறி பலவாயின. வடமாகாணம் முழுமையுமானசைவமக்கள்கோவிலுக்கு வீட்டிலுள்ள குறைபாடுகளுக்காக நேர்த்தி வைப்பது வழக்கமாயிற்று. கடனுக்காக வழக்கிட்டவர்களும் கொடுப்பதை வாங்குவதைதர்க்கத்தில் எடுப்பவர்களும் 'முறிகண்டியான மீது ஆணையாக' என ஒரு சத்தியம் செய்தால்' வழக்கையே திரும்பப்பெறுமளவுக்குமக்கள்நம்பிக்கை இருந்தது.

ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தாறாம்ஆண்டுஒருஅசம்பாவிதம் நடந்தது. அதில் ஒன்பது பொதுமக்களை இராணுவம் கொலை செய்து கோவில் வாசலில் அடுக்கினார்கள். கோவில் கைவிடப்பட்டது. நீண்ட காலப்பகுதியாக இந்த இடம் வெறிச்சோடியது. அந்த காலப்பகுதியில் 'ஏநைன'; வீதி முற்றாக பொதுமக்கள் பாவனைக்குள் இருக்கவில்லை. மீண்டும் புதிய மிடுக்குடன் கோவில் எழுந்தாலும் மக்களிடம் பழைய நம்பிக்கைகள் விட்டுப்போயிற்று. இப்போது கண்டிப்பாக கோவிலடியில் இறங்கித்தான் போக வேண்டும்என்பதைபெரும்பாலானவர்கள் கைக்கொள்வதில்லை.

# டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான பாதையை வகுத்தல்: இலங்கைக்கான வாய்ப்புகள் மற்றும் சவால்கள்





AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

உலகளாவிய ரீதியில் மின்னணு (டிஜிட்டல்) பொருளாதாரத்தின் கருத்து முக்கியத்துவம் பெற்றுள்ளது. பலநாடுகள் பொருளாதார வளர்ச்சி, திறன், மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் நோக்கில் மின்னணு (டிஜிட்டல்) தொழில்நுட்பங்களை ஏற்கின்றன. இலங்கைக்கு பொருளாதாரத்தை மின்னணுக்குப்படுத்துவது ஒரு முக்கிய முன்னேற்றமாக விளங்கக்கூடும். இது பல காலமாக நிலவி வரும் பொருளாதார சவால்களை தீர்க்கவும், தேவைப்படும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கவும் உதவக்கூடும். எனினும், மின்னணு (டிஜிட்டல்) மாற்றத்தின் பாதை சிக்கலானது. இது பல அடிப்படை, ஒழுங்குமுறை மற்றும் சமூக சவால்களை எதிர்கொள்ள தேவைப்படும். இந்தக் கட்டுரை இலங்கைக்கான மின்னணுக்குப்படுத்தலின் அர்த்தமும் விளைவுகளையும் ஆராய்கின்றது. இதன் பயன்கள், சவால்கள் மற்றும் முதலீட்டாளர் நம்பகத்தன்மைக்கு ஏற்படும் தாக்கத்தையும் விளக்குகிறது.

**மின்னணு (டிஜிட்டல்) பொருளாதாரம் என்றால் என்ன?**

மின்னணு பொருளாதாரம் என்பது பாரம்பரிய பொருளாதார செயல்முறைகளை மின்னணு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மறுசீரமைப்பதாகும். இது பல்வேறு புதுமைகள் மற்றும் மாற்றங்களை உள்ளடக்கியது, அவற்றில் சில பின்வருமாறு:

1. மின்னணு (டிஜிட்டல்) செலுத்தல்கள் மற்றும் நிதிச் சேவைகள்: பணத்திலிருந்து மின்னணு செலுத்தல்களுக்கு மாறுதல் மின்னணு பொருளாதாரத்தின் அடிப்படை கூறாகும். மொபைல் வாலெட்கள், இணைய வங்கிப் பணி, கியூ கோடு செலுத்தல்கள் போன்ற ஊடகங்கள்/பிளாட்பார்ம்கள் மூலம் பரிவர்த்தனைகள் வேகமாகவும் பாதுகாப்பாகவும் நிகழ்த்தப்படுகின்றன. இது பொருளாதாரத் திறனை அதிகரிக்கவும் நிதி இடைவெளியை குறைக்கவும் உதவுகின்றது.

2. மின்னணு வணிகம் மற்றும் மின்னணு வர்த்தகம்: மின்னணு பொருளாதாரத்தின் மூலம் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs) ஆன்லைன் பிளாட்பார்ம்கள் மூலம் தமது பயன்பாட்டைப் பெருக்க முடிகின்றது. இது இலங்கை பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு புதிய சந்தைகளை உருவாக்கி, ஏற்றுமதியை உயர்த்துவதற்கும் பாரம்பரிய சந்தைகளில் சார்பு குறைக்கவும் உதவுகின்றது.

3. தரவின் அடிப்படையில் முடிவெடுப்பது: மின்னணுக்குப்படுத்தல் தரவுகள் சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வை மேம்படுத்துகின்றது. இதன் மூலம் நிறுவனங்களும் அரசாங்கமும் நல்ல முடிவுகளை எடுக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக, பெரிய தரவுகள் வரிசை செயல்பாடுகளை மேம்படுத்த, முன்னறிவிப்பு தேவை போக்குகள் (forecast demand trends) மற்றும் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்த உதவுகின்றன.

4. மின்னணு அரசு சேவைகள் (e-Government): அரசாங்க சேவைகளை மின்னணுக்குப்படுத்தல் செயல்முறைகளை எளிதாக்குகின்றது. மக்கள் தகவல்களை அணுகவும், ஆவணங்களை சமர்ப்பிக்கவும், வரி செலுத்தவும் எளிதாக இருக்கின்றது. e-Government ஊடகங்கள் விருப்ப ரீதியான செயல்பாடுகளை குறைத்து, நாட்டில் வணிகச் சூழலை மேம்படுத்த உதவுகின்றன.

5. புதுமை மண்டலம்: மின்னணு பொருளாதாரம் புதுமைக்கு வழிவகுக்கும் சூழலை உருவாக்குகின்றது. மின்னணு மூலப்பொருள் அமைப்பை உருவாக்குவதன் மூலம், அரசாங்கம் தொழில்நுட்ப சார்ந்த தொடக்க நிறுவனங்களுக்கான பயிற்சியை வழங்கி,

இளம் தொழில்முனைவோர்களையும், தகவல் தொழில்நுட்பத்திற்கான வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்க உதவுகின்றது.

**மின்னணுக்குப்படுத்தல் இலங்கை பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கம்**

மின்னணு பொருளாதாரத்திற்கு மாறுவது பல துறைகளில் இலங்கைக்கு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும்:

1. பொருளாதார திறன் மற்றும் விளைவு விருத்தி: பழைய கையேடு செயன்முறைகளை மின்னணு முறைகளால் மாற்றுவதன் மூலம், நிறுவனங்கள் செயல்பாட்டு செலவுகளை குறைத்து விளைவை அதிகரிக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக, தானியங்கி செலுத்தல் முறைகள் பரிவர்த்தனை செயலாக்க நேரத்தை குறைக்க, மின்னணு ரசீது முறைகள் ஆவண தேவைகளை நீக்குவதன் மூலம் நேரம் மற்றும் வளங்களை மிச்சப்படுத்த உதவுகின்றன.

2. வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் குறைப்பு: மின்னணுக்குப்படுத்தல் தனிப்பட்ட மக்களிலும் அரசாங்க சேவைகளிலும் பொறுப்பையும் வெளிப்படைத்தன்மையையும் அதிகரிக்க உதவுகின்றது. எடுத்துக்காட்டாக, மின்னணு கொள்முதல் ஊடகங்கள் நேரடியாக பரிவர்த்தனைகளை கண்காணித்து ஊழலுக்கான வாய்ப்புகளை குறைக்கின்றன. அதிக வெளிப்படைத்தன்மை பொதுமக்களின் நம்பகத்தன்மையை உருவாக்கி, உள்ளக மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அனுகூலமான சூழலை

உருவாக்க உதவுகின்றது.

3. மின்னணு வணிகத்திலிருந்து அதிக வருவாய்: மின்னணு வணிகம் இலங்கைக்கு வளர்ச்சியின் முக்கிய வாய்ப்பாக விளங்குகின்றது. குறிப்பாக உலகளாவிய ரீதியில் ஆன்லைன் கொள்முதல் நோக்கமாக மாறியுள்ள சூழலில். உள்ளூர் நீனிசிக்கள் மின்னணு வணிகத்தை உருவாக்குவதற்கு ஆதரவு அளிப்பதன் மூலம், இலங்கை உள்நாட்டு வருமானத்தை உயர்த்தியும் சர்வதேச சந்தைகளை தொடரும் வாய்ப்புகளை அதிகரிக்கவும் முடிகின்றது. மேலும் வெளிநாட்டு நாணயத்தை நாட்டுக்குள் கொண்டு வர உதவுகின்றது.

4. நிதி இடைவெளி குறைப்பு மற்றும் பொருளாதார சக்திமிக்க தன்மை: மொபைல் (தொலைபேசி) வங்கி சேவைகள் மற்றும் சிறிய அளவிலான கடன்கள் போன்ற மின்னணு நிதிச் சேவைகள் ஊரக மற்றும் குறைந்த வருமான மக்கள் தொகைகளுக்கு சேர்ந்து அவர்களை பொருளாதாரத்தில் பங்கேற்க ஊக்குவிக்கின்றன. இவை சேமிப்பு மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கின்றன. இதனால் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன.

5. பாதுகாப்பு மற்றும் பொருளாதார அதிர்ச்சிகளை எதிர்கொள்ளும் திறன்: மின்னணு பொருளாதாரம் பெரும்பாலும் பாண்டமிக் போன்ற பிரச்சனைகளுக்கு சக்தியுடன் எதிர்கொள்கின்றது. மின்னணு பிளாட்பார்ம்கள் தொலைவழி வேலை, ஆன்லைன் பரிவர்த்தனை, மற்றும் தொலை மருத்துவ சேவைகள் போன்றவற்றை வழங்குவதன் மூலம், அவசரகாலங்களில் முக்கிய சேவைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடரும் நிலையை உறுதி செய்கின்றன.

## இலங்கையில் மின்னணுக்குப்படுத்தலுக்கான தற்போதைய தடைகள்

டிஜிட்டல் பொருளாதாரத்தின் பார்வை நம்பிக்கைக்குரியதாக இருந்தாலும் தற்போது இலங்கையில் இந்த மாற்றத்திற்கு பல தடைகள் தடையாக உள்ளன:

1. குறைந்த மின்னணு அடிப்படை அமைப்பு: சில பகுதிகளில், குறிப்பாக ஊரகப் பகுதிகளில், மின்னணு அடிப்படை அமைப்பு இன்னும் போதவில்லை. மெதுவான இணைய வேகங்கள், குறைந்த தொலைபேசி இணைப்பு, மற்றும் மின்னணு பண பரிவர்த்தனை வசதிகளின் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகள் வணிகம் மற்றும் நுகர்வோர் மின்னணு சேவைகளை ஏற்க தடையாக இருக்கும்.

2. மின்னணு பாதுகாப்பு மற்றும் தரவுக் காப்பு ஆபத்துகள்: மின்னணு பயன்படுத்தல் அதிகரிக்கும் போது சைபர் தாக்குதல்கள் மற்றும் தரவுப் பார்வையில் அதிகரிக்கும் அபாயங்களும் அதிகரிக்கின்றன. முழுமையான மின்னணு பாதுகாப்பு சட்டம் இல்லாமல் தனிப்பட்ட நிதி தகவல்கள் போன்ற தரவுகள் வெளிப்படும் அபாயமுள்ளது. இது நிதி இழப்பு மற்றும் மின்னணு பிளாட்பார்ம்களில் நம்பகத்தன்மை குறைவாக உள்ளடக்கும்.

3. ஒழுங்குமுறை மற்றும் கொள்கை கட்டுப்பாடுகள்: தற்போதைய ஒழுங்குமுறை முறைகள், குறிப்பாக மின்னணு செலுத்தல்கள், தரவுக் காப்பு, மற்றும் ஆன்லைன் வணிகப் பதிவு போன்ற துறைகளில், மின்னணு பொருளாதாரத்தின் தேவைகளுக்கு பூர்த்தியாக அமையாது. மின்னணு பரிவர்த்தனை, தரவுப் பாதுகாப்பு, மற்றும் நுகர்வோர் பாதுகாப்பை ஆதரிக்கும் விதமாக ஒழுங்குமுறைகளை சீரமைப்பது முக்கியமானது.

4. மின்னணு கல்வியறிவு மற்றும் திறன் குறைவு: இலங்கையில் மின்னணு பாகுபாடு இன்னும் மிகுந்து காணப்படுகின்றது. மக்கள் தொகையில் பெரும்பாலோருக்கு அடிப்படை மின்னணு கல்வியறிவு இல்லை. இது அவர்களை மின்னணு பொருளாதாரத்தில் முழுமையாக ஈடுபடவிடாது. மேலும், மின்னணு தொழில்நுட்ப துறையில் திறமையான நபர்களின் பற்றாக்குறை இலங்கை மின்னணு அமைப்புகளை உருவாக்க மற்றும் பராமரிக்கத் தடை ஏற்படுத்துகின்றது.

5. தொழில்நுட்ப முதலீடு மற்றும் புதுமை: மின்னணு பொருளாதாரத்தை உருவாக்க தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கு பெரும் முதலீடு தேவை. தொழில்நுட்பக் கட்டமைப்பு குறித்ததாக இலங்கையின் முழுமையான முதலீட்டு குறைவுகள் மின்னணு பொருளாதார கட்டமைப்பை உருவாக்கும் பணியில் வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது.

## முதலீட்டாளர் நம்பகத்தன்மைக்கு ஏற்படும் தாக்கம்

மின்னணு மாற்றத்திற்கு இலங்கை உறுதிப்பாட்டுடன் செயல்பட்டால், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FDI) மற்றும் உள்ளூர் முதலீடுகளை ஈர்க்க முதலீட்டாளர் நம்பகத்தன்மையை நேர்மறையாக உருவாக்கலாம்:

1. மேம்படுத்தப்பட்ட வணிகச் சூழல்: மின்னணுக்குப்படுத்தல் விருப்ப ரீதியான செயல்பாடுகளை குறைத்து நிர்வாகச் செயல்முறைகளை வேகமாக்கும். இது முதலீட்டாளர்களுக்கு முக்கியமான அம்சமாகும். உதாரணமாக; ஆன்லைனில் வணிகத்தை நிறுவுவதற்கு வாரங்களை விட நாட்களுக்குள் முடிந்துவிடும். இது புதிய முதலீட்டாளர்களுக்கு எளிமையையும் சிக்கனத்தையும் வழங்கும்.

2. வெளிப்படைத்தன்மை மற்றும் ஆட்சி மேம்பாடு: மின்னணு அமைப்புகளின் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை அதிகரிக்க இலங்கை முயலும்போது முதலீட்டாளர்களுக்கு ஒரு நல்ல சூழலை உருவாக்க உதவும். மின்னணு பதிவுகள் மற்றும் ஆன்லைன் அறிக்கைகள் ஊழல் வாய்ப்புகளை குறைக்கும். இது சர்வதேச முதலீட்டாளர்களுக்கு முக்கியமான கவலைகளில் ஒன்று.

3. மின்னணு சந்தையை அணுகுதல்: மேலும், அதிக நுகர்வோர் மின்னணு சேவைகளை ஏற்றுக்கொள்வதால் மின்னணு வணிகம், நிதி தொழில்நுட்பம், மற்றும் மின்னணு சந்தைப்படுத்தல் போன்ற துறைகளில் முதலீட்டாளர்களுக்கு தங்கள் வாடிக்கையாளர்களின் அடிப்படையைக் குறிக்கோளாக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

4. மொத்த முதலீட்டு நம்பகத்தன்மைக்கு எதிரான சவால்கள்: மாறாக, இலங்கை அடிப்படை அமைப்பு சவால்கள், மின்னணு பாதுகாப்பு பிரச்சனைகள், மற்றும் ஒழுங்குமுறை தடைகள் ஆகியவற்றை தீர்க்காவிட்டால் சில முதலீட்டாளர்கள் எச்சரிக்கையாக இருக்கலாம். பெரிய அளவிலான தரவுப் பாதுகாப்பு வழக்கம் அல்லது ஒழுங்குமுறை தாமதங்கள் போன்றவை முதலீட்டாளர்களின் நம்பகத்தன்மைக்கு பாதிப்பாகும்.

இலங்கையின் பொருளாதாரத்தை மின்னணுக்குப்படுத்துவது வெறும் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதை மட்டும் அல்ல, இது நாட்டின் பொருளாதாரப் பண்புகளை முழுமையாக மாற்றும் நிலைக்கு இட்டுச் செல்லும். அரசாங்கம், தனியார் துறை மற்றும் பொது மக்கள் அனைவரும் சவால்களை கடந்து மின்னணு பொருளாதாரத்தின் முழு ஆதாயங்களை அடைய ஆற்றலுடையதாக செயல்படவேண்டும். தெளிவான மற்றும் திட்டமிட்ட அணுகுமுறையுடன் மின்னணுக்குப்படுத்தல் முதலீட்டாளர் நம்பகத்தன்மையை மேம்படுத்தி, பொருளாதார வளர்ச்சியை ஊக்கி, இலங்கைக்கு மின்னணு யுகத்தில் வளமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை அமைக்க முடியும். மின்னணுக்குப்படுத்தல் மூலம் இலங்கை பொருளாதாரத்தில் ஊக்கத்தை ஏற்படுத்தி முதலீட்டாளர் நம்பகத்தன்மையை உயர்த்துவதற்கான வாய்ப்பு உள்ளது. மின்னணு முறைகள் மூலம் அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளுக்கு வெளிப்படைத்தன்மை மற்றும் விளைவுகளை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அதே நேரத்தில், சரியான தரவுக் காப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து மக்களின் நம்பிக்கையை அதிகரித்து, தொழில்நுட்ப சவால்களைத் தாண்டி முன்னேறுதல் அவசியமாகும்.

மொத்தத்தில், இலங்கை மின்னணு பொருளாதாரத்தின் பாதையை எளிமையாகவும் பயனுள்ளதாகவும் உருவாக்க முடிந்தால், இது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கிய பங்களிப்பாக அமையும்.

# இலங்கைக்கு....

மூன்றாம்பக்கத் தொடர்ச்சி....

இடப்புறத்திலிருந்து வலப்பக்கமாக சட்டென பறந்து சென்ற பறவைக் கூட்டத்தை, அதே வேகத்தில் படம் பிடித்திருந்தேன். பிறகு பறவை நூலில் ஒப்பிட்டு பார்க்கும் போது, இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு வருகை தரும் சூரமாறிகள் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

இமயமலை பகுதிகளில் இனப்பெருக்கம் செய்துவிட்டு, தமிழகத்தின் மேற்குத்தொடர்ச்சி மலைகளுக்கு நீலத்தலை பூங்குருவிகள் குளிர் காலத்தில் வலசை வருகின்றன. எலி, சிறு பறவைகள், பூச்சிகளை வேட்டையாடி உண்ணும் இரவாடியான குட்டைக் காது ஆந்தை (Short-eared Owl), தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களுக்கு குளிர் காலத்தில் வலசை வருகின்றன. (பெரும்பாலான ஆந்தைகள் வலசை செல்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.)

ஆர்டிக் பகுதியிருந்து சற்றேறக்குறைய 20,000 கி.மீ., தொலைவிற்கு சென்று திரும்புகின்றதுருவ ஆலாவே (Artic Tern), வலசை பறவைகளுள் அதிக தொலைவு பயணிக்கின்றன. இப்பறவை இந்தியாவில் வெகு அரிதாக காணப்படுவதுண்டு.

## வலசை குறித்த ஆய்வுகள்

வலசை பறவைகள் (Migratory Birds) புவியின் மின் காந்தப்புலத்தை (Electromagnatic Field) உணர்ந்தே செயல்படுவதாக சில ஆய்வு முடிவுகள் தெரிவித்தாலும், தங்களது பாதைகளை முன்னுணர்ந்து, தொடர்ந்து பயணிப்பது முழுமையாக விடுபடாத புதிராகவே உள்ளது. பறவையியல் அறிஞர்கள் வலசை செல்லும் பறவைகளின் பாதைகளை கண்டறிந்து, அதன் வான்வழிகளை 12 தடங்களாக பிரித்துள்ளனர். இதில் இந்தியாவிற்கு வலசை வரும் பறவைகளின் வான் வழியை 'மத்திய ஆசிய வான்வழி' என பெயரிட்டுள்ளனர்.

ஒவ்வொரு பறவையும் தனக்கென ஓர் வாழ்வெல்லையை நிர்ணயித்துக் கொண்டு, அதற்குள்ளாகவே கூடுகட்டுவது, இணை தேடல், உணவு தேடல் என அனைத்து செயல்பாடுகளை நிகழ்த்துகிறது. இது 'வாழ்வு எல்லை' (Territory) என்றழைக்கப்படுகிறது. இது போலவே வலசை பறவைகள், தங்களது வலசை பாதையில் சீராக பயணிக்கின்றன. வாழ்வெல்லையை தாண்டி செல்லும் பறவையும், வலசை பாதையை தவறவிடும் பறவையும் பெருத்த இன்னல்களுக்கு உள்ளாகின்றன.

## இறுதியாக

வலசை மேற்கொள்ளும் பறவைகள் தங்கள் பாதையை எப்படி, எதனை அடிப்படையாக கொண்டு தீர்மானிக்கின்றன? பல தலைமுறைகளாக ஒரே வழித்தடத்தில் செல்வது ஏன்? சூழல் மாறுவதை எப்படி முன் உணர்கின்றன? என பல்வேறு தளங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்திற்கு லட்சக்கணக்கில் வலசை வந்துக் கொண்டிருந்த பறவைகள், இன்று ஆயிரக்கணக்காக குறைந்து போனதற்கு, நீர்நிலைகள், வாழிட அழிவு தான் முதன்மை காரணமாக அமைந்துள்ளது. வலசை பறவைகள் மட்டுமின்றி, உள்ளூர் பறவைகளையும் காக்க, நீர்நிலைகளையும், தாவரங்களையும் காப்பது அவசியமாகிறது. நாம் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள நீர்நிலைகளை சீர்ப்படுத்தி, நன்னீர் நிலைகளாக மாற்றி, இயல்பான மரங்களை வளர்க்கும் போது, வலசை பறவைகள் மட்டுமல்லாது, உள்ளூர் பறவைகளும் அவ்விடத்தை சோலையாக மாற்றும்.

கடந்த 2006-ஆம் ஆண்டிலிருந்து பன்னாட்டளவில் வலசை பறவைகளை காக்கவும், விழிப்புணர்வு ஏற்படுத்த, அதன் வலசை பாதைகளுக்கு பாதிப்பு ஏற்படுவதை தடுக்க, நீர்நிலைகளை காக்க என பல வழிகளில் மக்களிடம் பறவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த 'உலக வலசை பறவைகள் தினம்' மே 10, 11 தேதிகளில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

பறவைகளையும், இயற்கையையும் உயிரினும் மேலாக காத்து வந்தவர்கள் தமிழர்கள். ஒரு நாட்டின் அரணாக தொல் தமிழன் வள்ளுவன் சுட்டிய மணிநீரையும், மண்ணையும், மலையையும், அணிநிழற் காட்டையும் காத்து, இலட்சக்கணக்கான விருந்தாளிகளை (பறவைகள்) இலங்கை நோக்கி வரவேற்போம்.



# நாட்டின் பொருளாதாரம்

இலங்கையின் சமீபத்திய பொருளாதார ஸ்திரத்தன்மை, சந்தையின் நான்கு காலாண்டு வளர்ச்சி மற்றும் 2023 இல் நடப்புக் கணக்கு அதிகரிப்பு என்பன குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்' என்று உலக வங்கியின் இலங்கை பணிப்பாளர் டேவிட் சிஸ்லன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட மிக வேகமாக ஸ்திரமடைந்துள்ளது. 2024ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 4.4 வீதமாக பதிவாகும். இது ஏற்கனவே எதிர்வு கூறப்பட்டதை விட அதிகமானது. இலங்கையை பொறுத்தவரையில் இது ஒரு நல்ல செய்தியாகும் என்று உலக வங்கி அறிவித்திருக்கிறது.

ஆனால் மீட்சியானது பேரண்ட பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தொடர்ச்சியான சீர்திருத்தங்களை பராமரிப்பதில் தங்கியுள்ளது என்றும் உலக வங்கி வெளியிட்டிருக்கின்ற இலங்கை தொடர்பான புதிய அரையாண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் வறுமை வீதமானது இவ்வருடத்தில் 23.5வீதமாகவுள்ளது. இது இன்னும் ஒரு சவாலாகவே இலங்கைக்கு காணப்படுகிறது. 2026 ஆம் ஆண்டு வரை 20 வீதத்துக்கு அதிகமான வறுமை நிலை இலங்கையில் பதிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிது எனவும் உலக வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் சமீபத்திய பொருளாதார ஸ்திரத்தன்மை, சந்தையின் நான்கு காலாண்டு வளர்ச்சி மற்றும் 2023 இல் நடப்புக் கணக்கு அதிகரிப்பு என்பன குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்' என்று உலக வங்கியின் இலங்கை பணிப்பாளர் டேவிட் சிஸ்லன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எதிர்கால வாய்ப்புகள் என்ற தொனிப்பொருளில் இலங்கை குறித்த இந்த அறிக்கையை வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள உலக வங்கியின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் மற்றும் உலக வங்கியின் பொருளாதார நிபுணர்களான ரிச்சர்ட் வால்க்கர் மற்றும் ஸ்ருதி லக்டகியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இலங்கை கிட்டத்தட்ட 2.3 வீத பொருளதார வளர்ச்சியை நோக்கி நகரும் என்று இவ்வருட ஆரம்பத்தில் உலக வங்கி எதிர்வுகூறியிருந்தது. ஆனால் அதனை தாண்டி இவ்வருடத்தில் 4.4 வீத வளர்ச்சி பதிவாகும் என்று புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிலிருந்து மறை பெறுமான பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்த இலங்கை 2023 ஆம் ஆடின் நான்காம் காலாண்டு முதல் நேர்பெறுமான வளர்ச்சியை பதிவு செய்துவருகிறது.

இதேவேளை இலங்கைக்கு வருடத்திற்கு 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவில் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. தற்போது இலங்கையானது வருடம் ஒன்றுக்கு சுமார் 12 பில்லியன் டொலர்களை ஏற்றுமதி வருமானமாக பெறுகிறது.

"இலங்கை அதிக ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டை இலக்காகக் கொள்ள வேண்டும், வரிச் சலுகைகள் இருந்தாலும் முதலீடுகள் வரவில்லை. முதலீடுகளை அதிகரிப்பதற்கு வரிச்சலுகைகள் உதவவில்லை" என்று உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் கெவோர்க் சர்க்ஸ்யான் குறிப்பிட்டார்.

இலங்கை குறித்த அறிக்கையை வெளியிடும் நிகழ்வில் உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் கெவோர்க் சர்க்ஸ்யான் குறிப்பிடுகையில்

இலங்கையின் பொருளாதாரம் வேகமாக ஸ்திரமடைந்திருக்கின்றது. இது ஒரு நல்ல செய்தியாகும் இது ஆச்சரியமான விடயமாகத் தான் இருக்கின்றது. ஆனால் பாதகமான செய்தியும் உள்ளது. இன்னும் இலங்கைக்கு சவால்கள் காணப்படுகின்றன. வறுமை தொடர்ந்து 25 வீதமாகவே பதிவாகி கொண்டிருக்கின்றது. இலங்கையில் நான்கு பேரில் ஒருவர் வறுமை கோட்டுக்குள் இருக்கின்றார். இது மிக விரைவாக அவதானம் செலுத்தப்பட வேண்டிய விடயமாக இருக்கின்றது. இங்கு மேஜிக் எதுவுமில்லை.

மாறாக கடின உழைப்பும் மறுசீரமைப்புகளின் தொடர்ச்சியுமே அவசியமாகின்றன. இவற்றின் ஊடாகவே இந்த விடயத்தில் முன்னேற்றத்தை காண முடியும். இதேபோன்று ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கப்படுவது அவசியமாகும். மறுசீரமைப்புகள் மிக முக்கியமாகும். புதிய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

உலக வங்கியின் சிரேஷ்ட பொருளாதார நிபுணர் ரிச்சர்ட் வால்க்கர் குறிப்பிடுகையில்

நாம் அரசாங்கத்துக்கு பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அதாவது மறுசீரமைப்பு கொள்கைகள் தொடர வேண்டும். மறுசீமைப்புக் கொள்கையை தொடர்வதன் ஊடாகவே முன்னேற்றம் ஏற்படும். அதுமட்டுமின்றி வறுமையை குறைப்பதற்கு நடவடிக்கைகள் அவசியமாகின்றன. இதற்கு கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் தொடர வேண்டும் பெண் தொழிற்படை அதிகரிக்கப்படுதல், பொருளாதார டிஜிட்டல் மையமாகுதல், ஏற்றுமதி அதிகரிப்பு என்பன முக்கியமாகும். இலங்கையின் ஏற்றுமதியை 10 பில்லியன் டொலர்களினால் அதிகரிக்க முடியும். அதற்கான ஆற்றல் காணப்படுகின்றது. இலங்கையின் இறக்குமதியை பார்க்கும் போது கடந்த பல வருடங்களில் அதிகரித்திருக்கின்றது. ஆனால் ஏற்றுமதி இன்னும் அதிகரிக்காமல் இருக்கின்றது.

ஏற்றுமதியை 10 பில்லியன் டொலர்களினால் அதிகரிக்கும்போது மேலும் ஒரு இலட்சத்து 42 ஆயிரம் தொழில்வாய்ப்புகள் புதிதாக உருவாக்க முடியும். இந்த ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு ஏற்றுமதியை திசைமுகப்படுத்திய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அவசியமாகும். அதற்கு புதிய தீர்வைகளை வழங்க வேண்டும். வரி கட்டமைப்பில் மாற்றத்தை செய்ய வேண்டும். வரி கட்டமைப்பை மாற்ற செய்யும் போது அரச வருமானம் பாதிக்கப்பட கூடாது. அரச வருமானத்தை பாதிக்காமல் தீர்வைகளை குறைத்தால் ஏற்றுமதியை அதிகரிக்க முடியும். எனவே ஏற்றுமதி இலக்காகக் கொண்ட வகையிலேயே வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்க வேண்டும். வெளிநாட்டு முதலீடுகளுக்கான சூழல் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். அதற்கு நல்லாட்சி மிக முக்கியம்.

அதேபோன்று உட்கட்டமைப்பு வசதிகளும் முக்கியமாகும். அதுமட்டுமின்றி சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை செய்து கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி முதலீடுகளுக்கான ஒற்றைச் சாளர முறை பயன்படுத்தப்படுவது மிகவும் முக்கியமாகும். 10 பில்லியன் டொலர்களால் ஏற்றுமதி அதிகரிக்க முடியும் என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டும். அதனூடாக மிகப்பெரிய மாற்றத்தை பொருளாதாரத்தில் ஏற்படுத்த முடியும். தற்போது உலக வங்கிக்கு அரசாங்கத்துடன் எந்த விதமான திட்டங்களும் நிலுவையில் இல்லை.

புதிய அரசாங்கத்துடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியுள்ளது. பேச்சுவார்த்தை நடத்தி அரசாங்கத்தின் திட்டங்களை நாங்கள் அறிந்துகொண்டு அதிலிருந்து எவ்வாறு எமது உதவி திட்டங்களை வழங்க முடியும் என்பதை நாம் ஆராய்வோம். எல்லாவற்றுக்கும் மிக முக்கியமாக நாட்டில் இந்த மறுசீரமைப்பு கொள்கைகளை தொடர்ந்து பின்பற்ற வேண்டும். அவற்றை நடுவில் நிறுத்தி விடக்கூடாது என்றார்.

# அதீத நுகர்வின் ஆபத்து

**நுகர்வுக் கலாச்சாரம் ஆக்டோபஸின் கரங்களைபோல்மனிதனைசுற்றிவளைத்து இறுக்குகிறது .**

**அழுக்குநீக்கியான சவர்க்காரம் 99 % கிருமிகளை கொல்கிறது என்ற கப்ஸாவை அப்படியே நம்புகிறோம் .**

**நீண்டநாள் இருப்பில் இருக்கும் சவர்க்காரத்தில் பூஞ்சணம் பிடிப்பதையோ 99 % கிருமி கொல்லும் சவர்க்காரத்தில் எப்படி பூஞ்சணம் பிடிக்கும் என்பதையோ நாம் சிந்திப்பதில்லை .கரி கொண்டு பல் துலக்கிய அப்புவிற்கு 80 வயதிலும் பல் உறுதியாக இருந்தது .**

**பற்பசை கொண்டு பல் துலக்கும் எமக்கு 40 வயதில் பல் ஆட்டம் காண்கிறது .**

உலகின் தற்போதைய தலையாய பிரச்சினை என்னவென்று நினைக்கிறீர்கள் ?

மக்கள் தொகைப் பெருக்கம்?

இல்லை.

over-population அன்று,

இன்று over-consumption தான் என்கிறார்கள்.

அதாவது ஒரு தேசத்தில் வெறும் 100 பேர் இருக்கலாம், இன்னொரு தேசத்தில் 10,000 பேர் இருக்கலாம்.

ஆனால் 100 பேர் இருக்கும் தேசம் பேராசையுடன் பத்தாயிரம் பேர்களுக்கான resource களை படுவேகமாக நுகர்ந்து கொண்டிருக்கலாம்.

இப்போது இந்த இரு நாடுகளும் கிட்டத்தட்ட ஒரே மக்கள்தொகை கொண்டவை என்று சொல்லிவிட முடியும்.

population is not exactly the issue. consumption is

அமெரிக்கர் ஒருவர் இந்தியர் ஒருவரை விட சராசரியாக 32 மடங்கு அதிகம் உலிஜவிற்துள செய்வதாகச் சொல்கிறார்கள்.

அதாவது, 32 பேருக்கான சாப்பாட்டை ஒருவரே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார் .

இந்த over consumption நம்மிடமும் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது .

சூப்பர்மார்க்கெட் ஒன்றுக்குச் சென்று பார்த்தால் என்னென்னவோ தயாரிப்புகள் கலர் கலராக, வகை வகையாக, வெவ்வேறு சைஸுகளில் அடுக்கி வைக்கப்பட்டு இருக்கும்.

இதை எல்லாம் கூட வாங்குவார்களா என்று யோசிப்போம்.

வாங்குவதால் தானே வைக்கிறார்கள்?

பிரியாணி மசாலா ஓகே, தக்காளி சாதம், லெமன் சாதம், தேங்காய் சாதத்துக்குக் கூட மசாலா வந்திருக்கிறது.

ஒன்றுக்கொன்று என்ன வித்தியாசம் என்று தெரியவில்லை.

' பூஜா kit' விலை 180 ரூபாய் !



உள்ளே ஒரு காட்டன் துணி, இரண்டு விளக்குத் திரி பாக்கெட், ஊதுபத்தி, கொஞ்சம் கற்பூரம், குட்டியூண்டு பாட்டிலில் பன்னீர், அவ்வளவு தான் 180 ரூபாய்!

தேவையற்ற பொருட்களை, தயாரிப்புகளை வாங்கிக் குவிக்கும் கலாச்சாரம் !

ஆணிகளை முதலில் விற்று விட்டுப் பிறகு சுத்தியலுக்கான தேவையை உருவாக்கும் வியாபார யுக்தி !

தேவையே இல்லாவிட்டாலும் ஒருவித ' fake demand ' ஐ உருவாக்குவதிலும் கார்ப்பரேட்கள் வல்லவர்கள்.

சமீபத்திய உதாரணம் vegetable wash! 250-300 ரூபாய்க்கு விற்கிறார்கள்.

இதை இதற்கு முன் நாம் கேள்விப்பட்டு இருப்போமோ!

பெரும்பாலும் மார்க்கெட்டில் இருந்து காய்கறிகளை வாங்கிவந்து அப்படியே தான் பிரிட்ஜில் வைத்துக்கொண்டு இருந்தோம்.

எல்லா productகளிலும் சகட்டுமேனிக்கு kills 99.9% germs என்று போட்டு விடுகிறார்கள்.

'கொரோனா வைரஸில் இருந்து பாதுகாக்கிறது' என்று போடுகிறார்கள்.

எந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் இந்த முடிவுக்கு வருகிறார்கள் போன்ற விவரங்கள் இல்லை.

' கொரோனா வைரஸில் இருந்து பாதுகாக்க ஊதுபத்தி சிறந்தது ' என்று கூடிய சீக்கிரம் விளம்பரங்கள் வந்து விடும்!

இந்த consumption எப்போதும் exponential ஆக இருக்கிறது

அதாவது நாம் நம் தாத்தாவை விட 8 மடங்கு அதிகம் நுகர்ந்தோம் என்றால் நம் பேரன் நம்மை விட 64 மடங்கு அதிகம் நுகர்வான்.

நம் தாத்தாவுக்கு இருந்தது ஒரே ஒரு option lifebuoy சோப் என்றால் நம் பேரன் முன்பு 64 சோப்புகள் கடை விரிக்கப்படும்.

எல்லா சோப்புகளும் more or less ஒன்றுதான் என்ற அறிவு நம்மிடம் இருப்பதில்லை.

64 வகை சோப்புகள், சூப்பர் மார்க்கெட்டில் கால்வாசி இடத்தை அடைத்துக்கொண்டு!

' selection time rule ' என்ன சொல்கிறது தெரியுமா?

இரண்டு பொருட்களில் இருந்து ஒன்றைத் தேர்ந்தெடுக்க நமக்கு 10 நிமிடங்கள் ஆகிறது என்றால் மூன்று பொருட்களில் இருந்து தேர்ந்தெடுக்க நமக்கு 100 நிமிடங்கள் ஆகுமாம்.

நான்கு பொருட்கள் என்றால் ஆயிரம் நிமிடங்கள்!

நம்முடைய நேரத்தையும் சத்தமில்லாமல் திருடி விடுகின்றன இந்த ஹைப்பர் மார்க்கெட்டுகள்.

இது நல்லது தானே? நிறைய தயாரிப்புகள் என்றால் நிறைய வேலைவாய்ப்பு என்று நினைத்தால் தப்பு.

அந்தக் குறிப்பிட்ட தயாரிப்பு எப்படி சந்தைக்கு வருகிறது என்ற விவரம் நம்மிடம் இல்லை.

முழுக்க முழுக்க automated process சில் வந்திருக்கலாம்.

எந்த ஒரு தயாரிப்பும் அப்படியே வானத்தில் இருந்து குதித்து விடுவதில்லை.

அது பஞ்சபூதங்களையும் கணிசமான அளவு பதம் பார்க்கிறது. அதற்கான தயாரிப்பில்

## படித்ததில் பிடித்தது

# ஆபத்தை அதிகரிக்கும் தேவையற்ற நுகர்வு கலாச்சாரம்



எத்தனை தண்ணீர் உறிஞ்சப்பட்டது, எத்தனை ஏக்கர் மண் மலடானது, எத்தனை டன் காற்று மாசுபட்டது, அந்தத் தயாரிப்பு எத்தனை carbon footprint ஐ பூமியின் வளிமண்டலத்தில் வெளிவிட்டது என்றெல்லாம் நமக்கு தெளிவாகத் தெரிவதில்லை.

மேலும் அந்தத் தயாரிப்பின் பின்புலத்தில் நசுக்கப்பட்டவர்கள் யார், மிரட்டப்பட்டவர்கள் யார், அதன் பின்புலத்தில் இயங்கும் socio, economic, political forces கள் எதுவும் நமக்கு விளங்குவதில்லை.

' கடை விரித்தேன் கொள்வார் இல்லை' என்ற வாசகம் இப்போது எடுபடாது .

எங்கே கடைவிரித்தாலும் எங்கிருந்தோ 'கொள்வார்' கள் வந்து விடுகிறார்கள் .

home-made என்று போட்டுவிடு, organic என்று எழுது, 100% hygienic என்று எழுது, good for liver என்று போடு,

ஏதோ ஒரு வைட்டமின் இருக்கிறது என்று அளந்து விடு, கவரில் பற்கள் தெரியச் சிரிக்கும் ஒரு happy family யின் படத்தைப் போட்டுவிட்டு, அவ்வளவு தான், shit sells !!

ஓகே. இவை எல்லாம் நமக்கு ஏற்கனவே தெரிந்த விஷயங்கள் தானே என்றால் பொருட்களை மட்டும் அல்ல, சேவைகளையும் நாம் over consume செய்கிறோம் என்று தோன்றுகிறது.

தினமும் 3 GB டேட்டா இலவசம் .

வேறு என்ன செய்ய?

வீடியோக்கள் விஉஷலியியி செய்யச் செய்ய மேலெழும்பி வந்து கொண்டே இருக்கின்றன.

இரவு முழுவதும் பார்க்கலாம். காலையில் நம் cognitive data base அப்படியே தான் இருக்கும்.

எதையும் புதிதாக கற்றுக்கொண்டு இருக்க மாட்டோம். எதுவும் நம்மை மாற்றி இருக்காது.

' Stop making stupid people famous ' என்று சொல்வார்கள்.

அரைவேக்காடுகளை, கத்துக்குட்டிகளை நாம் தான் பிரபலம் ஆக்குகிறோம்.

மில்லியன் subscribers, லட்சக்கணக்கில் followers !

வாங்குவோர் இல்லையென்றால் விற்பனை செய்வோர் இல்லை. பார்ப்போர் இல்லை என்றால் பிரபலங்கள் இல்லை .

data என்றில்லை, மின்சாரம், தண்ணீர், எரிபொருள் எல்லாமே over consumption தான்.

Buffet – வில் இலவசமாகக் கிடைக்கிறது என்று எல்லா அயிட்டங்களிலும் ஒன்றை எடுத்து உள்ளே தள்ளுகிறோம்.

விளைவு : வயிற்று வலி, இரண்டு நாள் வயிற்று உப்புசம், உபாதை!

இலவச மருத்துவம் என்பதற்காக நோயை வலிய வரவழைத்துக் கொள்ளவும் செய்வோம் நாம்!

மூன்றாவதாக நாம் வாழ்க்கையையும் லிஸஎஷ உலிஜவிற்துள செய்கிறோம்.

' நாளை என்பது நிச்சயம் இல்லை, இன்றே அனுபவித்து விடு ' என்பதெல்லாம் சரி தான்.

ஆனால் வாழ்க்கையில் நம் அனுபவங்களை, சுகங்களை, சந்தோஷங்களை சரி சமமாக distribute செய்கிறோமா?

40 வயதுக்குள்ளாகவே எல்லாவற்றையும் முடித்து விட்டு போதும்டா சாமி என்று எமுஜுழிற்விமி ஆகி விடுகிறோம்.

8 வயது சிறுவன் 28 வயது இளைஞன் போலப்பேசுகிறான்

'மஞ்சத்திலே கொஞ்சக் கொஞ்ச' என்று ஆறு வயது குழந்தை ஒன்று பாடுகிறது.

' expressioஐ பத்தலை ' என்று ஜட்ஜுகள் (?!) தீர்ப்பு சொல்கிறார்கள் .

நாளைக்கென்று கொஞ்சம் மிச்சம் வைப்போம்.

நீரை, மின்சாரத்தை, கனிம வளங்களை, பெட்ரோலை நம் பேரப்பிள்ளைகளுக்கும் விட்டு வைப்போம் என்ற எண்ணம் நமக்கு வருவதே இல்லை.

அளவுக்கு மிஞ்சினால்.????

அமிர்தமும் நஞ்சன்றோ...???

சரி... இதற்கான தீர்வு தான் என்ன,..???,

மிகவும் எளிது ....!!!!

விருப்பத்திற்காக நுகராதீர்கள் . தேவையிருந்தால் மட்டும் நுகருங்கள் ,

அப்படியென்றால், என் ஆசைகள் விருப்பங்கள் என்னாவது,,.???

உங்கள் அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகி விட்டதா என்று பாருங்கள், அதற்கு முன்னுரிமை தாருங்கள்,

அதன் பின் நீங்கள் விரும்புவதை நுகருங்கள், அந்த நுகர்வும் உடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் உங்களை பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டியது அவசியம் .

நீங்கள் விரும்பும், உங்களுக்கு அத்தியாவசிய தேவை இல்லாத எதையும் கடன் வாங்கி நுகராதீர்கள் .

# அன்னாசி பயிர்ச்செய்கை முறை மற்றும் பயன்கள்



எல்லாரும் விரும்பி உண்ணக்கூடிய பழங்களில் ஒன்றுதான் அன்னாசிப்பழம். சரி இந்த அன்னாசிப்பழம் பயிரிடும் முறை மற்றும் அன்னாசிப்பழம் பல தரப்பட்ட பயன்களை கொண்டுள்ளது

**அன்னாசி பயிர்ச்செய்கை** - பருவகாலம்:-

அன்னாசியை பொறுத்தவரை ஜுன் முதல் செப்டம்பர் மாதம் வரை நடவுக்கு ஏற்ற பருவம் ஆகும்.

நிலம் மற்றும் நிலத்தின் கார அமிலத்தன்மை:-

அன்னாசிப்பழம் பொதுவாக நல்ல வடிகால் வசதியுள்ள களிமண் பகுதியில் நன்கு வளரும் தன்மை கொண்டது. மண்ணின் கார அமிலத்தன்மை 5.5 முதல் 7.0 க்குள் இருக்க வேண்டும்.

**அன்னாசி பயிர்ச்செய்கை முறை:**

அன்னாசி பயிரிடல் முறையை பொறுத்தவரை தேர்வு செய்த நிலத்தை நன்கு உழுது கட்டிகள் இல்லாமல் சமன் படுத்திக்கொள்ள வேண்டும். நாற்றுகளை இரட்டை வரிசை முறையில் நடவு செய்வதற்கு ஏற்றவாறு பார்களை அமைக்க வேண்டும்.

கொண்டைகள், மேல்கன்றுகள், பக்ககன்றுகள் ஆகியவை நடவு செய்வதற்கு பயன்படுகிறது. 300 முதல் 350 கிராம் எடையுள்ள கன்றுகள் தேர்வு செய்து நட வேண்டும்.

நடவு செய்வதற்கு முன்பு கன்றுகளை மேன்கோசெப் 3% அல்லது கார்பன்டாசியம் ஒரு சதவீத கலவையில் 5 நிமிடங்கள் நனைத்து நடவு செய்ய வேண்டும்.

கன்றுகளுக்குஇடையில்உள்ளஇடைவெளி30 செ.மீ ஆகவும், வரிசைகளுக்கு இடையிலுள்ள இடைவெளி 60 செ.மீ ஆகவும் இருக்குமாறு விதை நேர்த்தி செய்த கன்றுகளை நடவு செய்ய வேண்டும்.

**அன்னாசி உயிர் நீர்:-**

அன்னாசியை பொறுத்தவரை மண்ணின் தன்மைக்கேற்ப நீர் பாய்ச்ச வேண்டும். நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**அன்னாசி பயிர்ச்செய்கை உரம்:-**

அன்னாசியை பொறுத்தவரை ஒரு ஏக்கருக்கு தொழு உரம் 40 முதல் 50 டன் இட வேண்டும். பின்பு செடி ஒன்றுக்கு 16 கிராம், சூப்பர் பாஸ்பேட் 4 கிராம் கலந்து கன்று நட்ட ஆறாவது மாதமும் பின்பு பன்னிரெண்டாவது மாதமும் இட வேண்டும்.

பின்பு மூன்று மாதத்திற்கு ஒருமுறை தொழுஉரம் மற்றும் வைத்து நீர் பாய்ச்சினால் நல்ல விளைச்சல் கிடைக்கும்.

பழத்தின் எடை அதிகரிக்க நாப்தலின் அசிட்டிக் அமில கரைசலை காய் பிடித்து இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் தெளிக்கவேண்டும். இதனால் பழங்கள் பெரியதாகி எடை அதிகரிக்கும்.



**அன்னாசி களை நிர்வாகம்:-**

அன்னாசியை பொறுத்தவரை களைகள் இல்லாமல் பராமரிக்க வேண்டும். ஒவ்வொரு முறைஉரமிடும்பொழுதும், அறுவடைமுடிந்தபின்பும் செடிகளுக்கு மண் அணைக்க வேண்டும். பழத்தின் பருமனை அதிகரிக்க காய்பிடித்து ஒன்றிரண்டுமாதங்களில் கொண்டையின்குருத்தை கிள்ளி எடுத்துவிட வேண்டும்.

இதனால் 12 – 20 சதவீதம் வரை பழங்கள் பெரியதாகும். கன்று நட்ட 12 மாதங்களில் பூ வர ஆரம்பித்து 18 மாதங்களில் பழங்கள் அறுவடைக்கு தயாராகும்.

**அன்னாசி பயிர்ச்செய்கை அறுவடை:**

இந்த அன்னாசியை பொறுத்தவரை பழங்கள் மஞ்சள் நிறமாக மாறியபின் அறுவடை செய்யவேண்டும். ஒரு ஏக்கருக்கு 50 டன் வரை பழங்கள் கிடைக்கும்.

**அன்னாசி பழம் பயன்கள்:**

அன்னாசிப்பழத்தில் உடலுக்குத் தேவையான பல்வேறு சத்துகள் உள்ளன. விட்டமின் பு,ய,ளீ சத்துகள் நிறைந்துள்ளன.

அன்னாச்சி இலைசாறு வயிற்றில் உள்ள பூச்சிகளை அழிக்கும் தன்மை கொண்டது.

அன்னாச்சிப்பழச் சாறுடன் தேன் சேர்த்து தொடர்ந்து நாற்பது நாள் சாப்பிட்டால் ஒரு பக்கத் தலைவலி, வாய்ப்புண், மூளைக்கோளாறு, ஞாபகசத்தி குறைவு போன்ற நோய்கள் குணமடையும்.

அன்னாச்சிப்பழத்தை தேனில் கலந்து சாப்பிட்டு வர உடல்பலம் கூடும்.

மஞ்சள் காமாலை உள்ளவர்கள் அன்னாச்சிப் பழச்சாற்றை சாப்பிட்டால் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

நோய் எதிர்ப்பு சத்தி அதிகம் உள்ள அன்னாச்சிப் பழத்தை சாப்பிட்டால் பல்வேறு நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்கலாம். அன்னாசி பயிற்றுகளில் இவ்வாறு அன்னாசி பயிரிடுதலில் பலதரப்பட்ட நன்மைகளும் திட்டங்களும் அடங்கியிருக்கின்றன.

# உயிர்வேலி

அமுதன்

மண்ணின் வளத்தை அதிகரிக்க அகத்தி, கிளிரிசிடியா போன்ற மரங்களை வேலியில்வைப்பதுநல்லது.அவைமண்ணில் நைட்ரஜனை நிலைப்படுத்துவன. மேலும் தீவனமாகவும்பயன்படுகிறது. இத்தாவரங்கள் வீசும் காற்றைக் கட்டுபடுத்துவதால் நிலத்திலுள்ள ஈரத்தன்மை வெளியேறாது தடுக்கவும் செய்கிறது.

ஒருவரின் வேலியை வைத்து அவரின் மனதைப் புரிந்து கொள்ளலாம். இக்காலங்களில், மிகுந்த செலவில் வேலிகள் அமைத்து, செடிகளும், பறவைகளும் வாழும் விலை மதிப்பான இடத்தை இழக்கிறோம். வேலிகள் அமைக்க வெவ்வேறு பொருட்களையும்,முறைகளையும் நம் கிராமங்களை ஒரு முறை சுற்றினால் புரிந்து கொள்ளலாம். தலைமுறைகள்தாண்டிவாழும் இவ்வியற்கை வேலிகள்,தனிப்பட்டவரவேற்கும்பண்புடையது. பெரும் சுவர்கள் எழுப்பி ஆட்களை வெளியில் நிறுத்தாமல், விலங்குகளிடமிருந்து மட்டும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அமையும். வேலிகளில் பயன்படுத்திய பொருட்களை வைத்தே அந்த கிராமத்திலுள்ள வளங்களை நாம் அறியலாம்.

துருப்பிடிக்காத, கெட்டுப்போகாதவேலிகளைச் சற்றுக் கற்பனை செய்து பாருங்கள். அவை சில உயிரினங்களைக் கொண்ட சிறிய உயிர்க்கோள அமைப்பாகச் செயல்படுகிறது.. வளர்ந்து கொண்டிருக்கும் உயிருள்ளச் செடி மற்றும் கொடிகளைக் கொண்ட வேலியை நாம் உயிர் வேலி என்று குறிப்பிடுவோம். காய்ந்த இயற்கை பொருட்களான மூங்கில், தண்டுகள், ஓலைபொருட்களானபனை, தேங்காய் மற்றும் பலவற்றால் அமைக்கப்படும் வேலிகளை இயற்கை வேலிகள் என குறிப்பிடுவோம். இயற்கை மற்றும் உயிர் வேலிகள் பல எளிய முறையில் செய்யக்கூடும்.

பல தாவர வகைகள் - உயிருள்ள அல்லது காய்ந்த நிலையில் வேலிகளுக்கு உபயோகமாகின்றன. இவை விலங்குகள் மேய்வதிலிருந்தும், வெளியாட்கள் உள்ளே நுழைவதில் இருந்தும் பாதுகாப்பு அளிக்கிறது. இவைவிலைகுறைவானதாகவும்,பார்வைக்கு அழகாகவும், காற்றுத்தடுப்பானாகவும் இருக்கிறது. பல காரணங்களைக் கருத்தில் வைத்து, தாவர வகைகள் தேர்ந்தெடுக்கப் படுகின்றன. மாடுகளும், ஆடுகளும் தீண்டாத செடிகளை வேலிகளில் வைப்பது வழக்கம். மேலும், தண்ணீர் பாதுகாப்பிற்கும், மண் அரிப்பை தடுப்பதற்கும் வேலிகள் முக்கிய பங்களிக்கின்றன. வேலிகள் தண்ணீர் ஆவியாவதை தடுக்கிறது, நுண் பருவநிலையை(Microclimate) ஏற்படுத்துகிறது.

அருகில் கிடைக்கும் பொருட்களை வைத்து,இயற்கை வேலிகள் அமைப்பது மிகவும் எளிது. தணலில் இயற்கை வேலியை, இயற்கைக் கட்டுமானம் அமைக்கும் போது மூங்கில் அறுவடை செய்யும் போது கிடைத்த கிளைகளை வைத்தே செய்து முடித்தோம்.

முட்களைக் கொண்ட தண்டுகளுடைய கிளுவை மரங்களை எல்லைப்பகுதியில் நெருக்கமாக நட்டி, விலங்குகள் புகாதவாறு தடுப்பு அமைத்திட முடியும். பிளந்த மூங்கில்கள், மஞ்சம்புல் , உன்னிச்செடி, ஓலை பொருட்களான தேங்காய்,பனை ஆகியவற்றைப் பின்னித்தட்டிகள்செய்துவேலிகள்அமைப்பர்.. இவையெல்லாம் 'படல்' என அழைக்கப்படும். மூங்கில்தட்டிகளைப்பின்னிவேலி அமைத்து, பிறகு அதில் பசுஞ்சாணம் மெழுகப்படும். பல இடங்களில், சிறிய குச்சிகள் கொண்டும், பனை மட்டைகளை ஒட்டி வைத்தும் வேலிகள் அமைப்பர். இன்னும் சில இடங்களில், வாழை இலைகள் கொண்டு சுவாரசியமாக வேலிகள் அமைத்துள்ளனர்.

உயிர்வேலிகள் வளர்ப்பது எளிது, பொறுமை மட்டுமே தேவை. வரம்பில்லாமல் உணவு, மருந்து மற்றும் தீவனம் வழங்கும் மூலம் தான் உயிர்வேலி.. மிகக்குறைந்த அளவிலான மழைப்பொழிவிலே இது வளர்ச்சியடைந்து வேலியாக மாறியது. இங்கே உள்ள செடிகள் (நீர்ப்பூவரசு அல்லது நெய்வேலிக் காட்டாமணக்கு மற்றும் நித்தியக்கல்யாணி ஆகும். காட்டாமணக்கு பூச்சிகளைக் கவர்ந்து மற்ற பயிர்களைப் பாதுகாக்க வல்லது.

சந்தையில் கிடைக்கும் நிறுவனப்பொருட்களைவிட உயிர்வேலிக்கு ஆயுள் அதிகம். வேலியின் ஆயுள் வேலியில் நட்டும் மரம் செடிகளைப் பொறுத்து மாறுபடும். உயிர்வேலிக்கு வளர்க்கும் மரங்களை தகுந்த பருவத்தில் அதன் கிளைகளை வெட்டி வேறு இடத்திலும் நட்டி வேலி உருவாக்கலாம். கிளைகளைக் கழித்தபின் அம்மரம் திரும்ப துளிர்த்து வளர்ந்து விடும்.

பொதுவாக கிளுவை, கள்ளி போன்ற முள் கொண்ட செடிகள் வேலியாக அதிகமாக இருப்பதைப் பார்க்கலாம். ஆடாதோடை, செம்பருத்தி போன்ற ஆடு,மாடு தீண்டாத செடிகள் அடர்ந்து வளரும். இவற்றை மற்றவர் பார்வையை தடுக்கும்படி வேலியாக அமைக்கலாம்.அடர்ந்து படரும் கொடிகளான பூசணி,வேலியில் படரவிட மிகவும் சிறந்த தாவரம். வெட்டிவேர், கற்றாழை போன்ற மருத்துவ குணம் வாய்ந்த



தாவரங்கள் கூட வேலிகளில் நடலாம்.. வெட்டிவேர் போன்ற செடிகள் மாசுபட்ட சூழலில் வளர்ந்து, நிலத்திலுள்ள நஞ்சுகளை சுத்திகரிக்கும். இந்த அடர்ந்த தாவரம் சிறிய விலங்குகளோ, பாம்புகளோ கூட உள்நுழைய அனுமதிக்காது.

மண்ணின் வளத்தை அதிகரிக்குமாறு, அகத்தி, கிளிரிசிடியா போன்ற மரங்களை வேலியில்வைப்பதுநல்லது.அவைமண்ணில் நைட்ரஜனை நிலைப்படுத்துவன. மேலும் தீவனமாகவும்பயன்படுகிறது. இத்தாவரங்கள் வீசும் காற்றைக் கட்டுபடுத்துவதால் நிலத்திலுள்ள ஈரத்தன்மை வெளியேறாது தடுக்கவும் செய்கிறது. காட்டாமணக்கு வேலியில் நட்டினால், பூச்சிகளை தன்வயம் ஈர்த்து, மற்ற செடிகளுக்குப் பூச்சி வராமல் தடுக்கும்.

களாக்காய் என அழைக்கப்படும் குத்துச் செடியின் காய் லாபகரமானது. இதன் வேலி பல பறவைகள், விலங்குகளை ஈர்த்து, தனிச் சுற்றுச்சூழலை உருவாக்கும். இரும்புக்கம்பி வேலிகளை விட அதிகம் நெருக்கம் வாய்ந்தது. அதைத்தாண்டி ஆட்களும் விலங்குகளும் எளிதில் நுழையமுடியாது.

சவுண்டல், மலைவேம்பு, சவுக்கு போன்ற உயரமாக வளரக்கூடிய மரங்கள் காற்றுத்தடுப்பானாக செயல்படுவதால் மண்ணிலிருந்து நீர் ஆவியாதலைத் தடுக்கும். நொச்சி, கழற்சிக்காய், மருதாணி போன்ற செடிகளும் பிரண்டை, முடக்கத்தான் போன்ற கொடிகளும் மருத்துவ குணம்வாய்ந்தவை. பனை, கொடுக்காப்புளி போன்ற மரங்கள் மண் அரிப்பை தடுக்கும்.

இவ்வாறு 67 தாவர வகைகள் வேலி அமைப்பிற்கானவை எனக் கண்டறியப் பட்டுள்ளன.

ஒரு உயிர் வேலி அழிந்தால், அந்த இடத்தில் எதிர்மறையாக பல்வேறு விளைவுகள் வரும். சுற்றுசூழலிற்கு இணக்கமான வேலிகள் அமைப்பது நம் கையில்தான் உள்ளது.

# வீட்டுப்பொருளாதாரம்....

மூன்றாம்பக்கத் தொடர்ச்சி....




நான்கு துளைகளை இட வேண்டும். காற்றோட்டத்திற்காகவும், கழிவுகளில் அதிகப்படியான நீர் தன்மை இருந்தால் அவை வெளியேறவும் இது உதவும்.

பின் உள்பகுதியில் ஒரு இன்ச் அளவிற்கு கருங்கல்லை நிரப்ப வேண்டும். அதன் மேல் சிறிது மணலை இடவேண்டும். தேவையற்ற காகிதங்களை அதன்மேல் இட வேண்டும்.

இப்பொழுது நம் உரக் குவளை தயாராகி விட்டது. இனி அன்றாடம் கிடைக்கக்கூடிய சமையலறைக் கழிவுகளை அதிக நீரின்றி ஈரப்பதம் மட்டும் இருக்குமாறு பார்த்து இந்த உரக் குவளையில் இடவேண்டும். அருகில் காய்ந்த இலை சருகுகள் கிடைத்தால் அவற்றை ஒவ்வொரு நாளும் சமையலறைக்கழிவுகளை இட்டபின் இடுவது சிறந்தது, இல்லையென்றால் காகிதங்களை சிறுதுண்டுகளாக்கி அதன்மேல் இடலாம். இவ்வாறு செய்வதால் ஈரப்பதத்தை சமமாக்க முடியும். உரக்குழியில் அதிக ஈரமிருந்தால் கழிவுகள் மக்குவதற்கு பதில் பூஞ்சணங்கள் ஏற்படும். அதனால் பூச்சிகள், கொசுக்கள் போன்றவை வரும் அதோடு துர்நாற்றமும் வீசும். அதனால் ஈரப்பதத்தையும் காற்றோட்டத்தையும் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு நாளும் இவற்றை நிரப்பியபின் சல்லடைபோன்ற மூடியைக்கொண்டு மூடுவது சிறந்தது அல்லது துணியை கொண்டும் மூடலாம். இவை இரண்டும் இல்லையென்றால் மூடியிலும் அங்கங்கே துளைகளிட்டு மூடவேண்டும். இந்த குவளையை நிழலில் வைக்க வேண்டும்.

வாய்ப்பிருப்பவர்கள் அன்றாடம் சாணப் பொடியை சிறிதளவு இந்த கழிவுகள் மேல் தூவுவது சிறந்தது. இதனால் விரைவாக சமையலறைக் கழிவுகள் உரமாக மாறுவதோடு தரமான உரமாகவும் இருக்கும்.

குவளை நிரம்பும் வரை இவ்வாறு கழிவுகள் அதன் மேல் சருகுகள் என்று அடுக்குகளாக இடவேண்டும். நிரம்பிய பின் அவற்றை சல்லடை மூடியுடன் வைத்துவிட்டு வாரம் ஒருமுறை மேலிருந்து கீழாக புரட்டவேண்டும். இவ்வாறு செய்ய ஓரிரு மாதத்திற்குள் இந்த கழிவுகள் நன்கு மக்கி மண்வாசனையை வெளிப்படுத்தும்.

இவற்றை நேரடியாகவும் நமது மண்ணோடு கலந்து விதை விதைத்து செடிகளை வளர்க்கலாம் அல்லது இவற்றில் நமது அருகில் இருக்கும் வளமான மண்ணிலிருக்கும் மண்புழுக்களை விட ஒருமாதத்திற்குள் வளமான மண்புழு உரத்தை பெறலாம்.

பின் இதனுடன் சரிபங்கு மண் கலந்து சிறுதொட்டிகளில் நிரப்பி தேவையான விதையை தூவவேண்டும். உதாரணத்திற்கு கீரை, வெண்டை, புதினா என எந்த செடியையும் வளர்க்கலாம்.

சராசரியா மூன்று குவளைகள் இருந்தால் போதும் சுழற்சி முறையில் கழிவிலிருந்து உரத்தை ஆண்டு முழுவதும் பெறலாம். ஆக வீட்டுக்கழிவுகள் மூலம் வீட்டிற்கு தேவையான காய், கீரைகளை எளிமையாக பெற உதவும்.

இனி குப்பைகள் என்று வீட்டின் பொன்னான சமையலறைக்கழிவுகளை நெகிழியுடன் சேர்த்து கொட்டி மண்ணிற்கும், சுற்றுச்சூழலுக்கும் மாசையேற்படுத்தாமல் நமக்கானநச்சற்றஇயற்கையானஉணவைப் பெறலாம். இந்த குவளையை ஒன்றன் மேல் ஒன்றாக வைக்க எந்த பிரத்தியேக இடமும் தேவையில்லை. நேரம், இடம், பொருட் செலவு எதுவுமின்றி சுலபமாக நமது உரத்தை நாமே இனி பெறலாம்.

# நளினச் செல்லையரும் மறுதாம்பு பயிர்ச்செய்கையும்

அறுவடை முடிந்த தனது வயலை வந்து

வடகோவை வரதராஜன்

பார்க்கும்படிநளினச்செல்லையர் அழைப்பு விடுத்துக் கொண்டே இருந்தார் .

சோலிகளில் அங்கும் இங்கும் ஓடுப்பட்டு திரிந்ததால் செல்லையர் வீட்டுப்பக்கம் போக நேரம் ஒதுக்கவே முடியவில்லை .

இன்று கொஞ்சம் ஓய்வாக நின்றதால் செல்லையரிடம் போய்வரலாம் என்று சைக்கிளைச்செல்லையர்வீட்டுக்குவிட்டேன்.

போனதும் முதலில் எதிர்ப்பட்டது பர்வதம்மாமிதான் .

காலையிலே மஞ்சள் பூசி குளித்து , கிளிப் பச்சை நிறச் சேலையும் கோடாலி முடிச்சுக் கொண்டையுமாக பர்வதம் மாமி மகாலட்சுமி மாதிரியிருந்த்தார் .

கீழ்ச்சேலையைத்தூக்கி இடுப்புக்கொசுவத் தில் செருகிக் கொண்டு முருங்கைக்காய் ஆய்ந்து கொண்டிருந்த மாமி என்னைக் கண்டதும் சேலையை இழுத்து கீழே விட்டு கால்களை மறைத்தபடி

'வாங்கோவிதானையார்,விதானையாரைக் கண்டுஎவ்வளவுநாளாச்சு' என்றுமகிழ்வுடன் வரவேற்றார் .

'செல்லையா அண்ணை இல்லையே'

'நிற்கிறார் நிற்கிறார் . வந்து உள்ளை இருங்கோ . கோப்பி போடுறன் '

இதற்கிடையில் செல்லையர் எனது குரல் அசுப்புக் கேட்டு நான் நிற்குமிடத்துக்கு வந்துவிட்டார் .

'வா ! வா ! உன்னைக் கண்டு எவளவு காலமாச்சு , சோக்காளியளை கண்டால் உனக்கு இருப்புக் கொள்ளாது . றெக்கை கட்டி பறக்கத் தொடங்கிடுவாய்.

வயலை ஒருக்கா பாக்கப் போவம் எண்டு எதினைநாளாய்க் கேட்டுக்கொண்டிருக்கிறன் ."அதுக்குத்தான் இண்டைக்கு வந்தனான் அண்ணை'

' அப்ப சரிவா . வெயிலுக்கு முன்னம் போட்டு வருவம் ' வடகோவை

'விதானையாருக்கு கோப்பி போட்டுட்டன் நிண்டு குடிச்சிட்டுப் போகலாம்'

அடுக்களையில்இருந்துபர்வதம்மாமியின் குரல் வந்தது .

செல்லையருக்கு பளபளக்கும் பித்தளை மூக்கு பேணியிலும் எனக்கு செரமிக் குவளையிலும் நுரை ததும்பத்ததும்ப கமகசுமக்கும் பால்க் கோப்பி வந்தது .

'ஏன் விதானையார் எங்களோடை ஏதேனும் கோவமே .இஞ்சலிப் பக்கமே இப்ப வாறதேயில்லை .'

'அப்பிடியொண்டுமில்லை சிநேகிதர்மார் வந்து நிண்டதாலை , வர நேரமில்லாமல் போச்சு '

'அதுக்காண்டி எங்களை ஒரேயடியாய் மறந்து போறதே. இடை சுகம் வந்து விசாரிக்கலாம்தானே ' மாமி பொய்க் கோபம் காட்டினார்.

'நீர் கதையைக் குடுத்து மினைக்கடுத் தாதேயும் . தம்பி பல சோலிக் காரன் . நாங்கள் ஒருக்கா தாமரைக் குளத்தடி வடகோவை

இதற்கிடையில் பர்வதம்மாமி சைக்கிளில் வந்து இறங்கி , சாறி சிக்குப் படாமல் இருக்க , காலில் போட்டிருந்த கிளிப்புக்களைக் களற்றி கூடையில் போட்டு விட்டு தூக்குச் சட்டியைத் தூக்கிக் கொண்டு வயலுக்கு வந்தார் .

'வாங்கோ கச்சானைத்திண்டுட்டு கதைக்கலாம்'

## விதானையார் வீட்டு முற்றம்

வயலுக்குப் போட்டு வாறம்'

'கச்சான் அவியப் போட்டிருக்கிறன் அவிஞ்சதும் எடுத்துக் கொண்டு நானும் வாறன் '

' நீர் ஏன் அங்கை '

'விதானையார் என்ன சொல்லுறார் எண்டு நானும் கேட்பம் '

செல்லையா அண்ணரின் வயலில் அறுவடை முடிந்து , வெட்டுத்தாகள் நீட்டிக் கொண்டிருந்தன . இயந்திர வெட்டு ஆனதால் வெட்டுத்தாள்கள் தாராளமாகவே நீண்டிருந்தன. வடகோவை

அறுவடைமுடிந்தவேறுஒருவயலில்முளை அடித்துக் கட்டப்பட்டிருந்த மாடொன்றின்மீது கரிக்குருவி ஒன்று அமர்ந்திருந்து , மாடு மேயும் போது பறந்து வரும் பூச்சிகளைப் பிடித்து கொண்டிருந்தது .

மாட்டின்பின்னால்உண்ணிக்கொக்குகள் திரிந்து மாட்டில் உள்ள உண்ணிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தன .

'சரி இப்ப என்னத்துக்கு என்னை வரச்சொன்னனனிங்கள்'

'நான்,நெல்லுவெட்டினஉடனைதறையை உழுது உளுந்து போடுறது உனக்குத் தெரியும்தானே . இம்முறை மருமோன் வந்திருக்கிறார்.இலங்கைபூராசுத்திப்பாக்கப் போறாராம். என்னையும் மனிசியையும் வரட்டாம் . அதுதான் இம்முறை உளுந்து செய்யேலாது அதுதான் உன்னோடை கதைப்பம் எண்டு கூப்பிட்டனான் '

'அதுக்கென்ன போட்டு வாங்கோவன் '

'தறையை உழாமல் இப்படியே விட்டுட்டுப் போறதே '

'அது அப்படியே கிடக்கட்டுமண்ணை . வெட்டிடன நெல்லு திரும்பவும் வளர்ந்து மீண்டும்கதிர்வந்து உங்களுக்கு அறுவடை தருமண்ணை .'

'உதென்னசீலம்பாய்க்கதை கதைக்கிறாய் .வெட்டின வயல் திரும்பக் கதிர் வாறதோ .நானென்னவிடுபேயன் எண்டுநினைச்சோ உந்தப் புலுடா எல்லாம் விடுகிறாய் '

ஈரமில்லாத வரம்பாகப் பார்த்து உட்கார்ந்தோம் . அறுவடையின் போது உதிர்ந்த நெல் மணிகளைப் பொறுக்க கிளிகளும் புறாக்களும் வந்து வயற் பரப்பில் இறங்கின .

செல்லையர்பக்கத்தில்இருந்தகமுகமடலை எடுத்துக் கொண்டு வர , மாமி அவித்த கச்சானை உடைத்து அதனுள் போட்டார் . எடுத்து வாயிலிட பருப்பின் பால் உப்புச் சுவையுடன் அமிர்தமாக இருந்தது .

'எப்பிடி இருக்கு விதானையார் ?'

'அந்தமாதிரி இருக்கு . அளவான உப்பும் கச்சான் பாலும் தேவாமிர்தமாய் இருக்கு'

எனது புகழ்ச்சியில் மாமி நாணிச் சிரித்தார்.

'விதானையாரைக் கண்டுபோட்டுத்தான் உடனை அவிச்சனான்.'

புன்னகையால் நன்றி சொன்னேன் .

'உதுகளை விட்டிட்டு நீ நெல்லைப் பற்றி சொல்லு'செல்லையர்காரியத்தில்கண்ணாக இருந்தார் .

'ஓமண்ணை அறுத்த பயிரை அப்பிடியே விட்டமெண்டால் அது திரும்ப தழைத்து கதிர்வரும்'

'என்ன புதினமான கதையெல்லாம் சொல்லுறியள் விதானையார்' பர்வதம்மாமி நாடியில் கையைவைத்து வாயைத்திறந்தார் . தாம்பூலச் சிவப்பு பட்ட சொண்டு கிளிச்சொண்டு போல் மின்னியது .

' இதை மறுதாம்பு பயிர்ச் செய்கை என்று சொல்கிறது . ஆங்கிலத்தில் Ratoon Cultivation என்று சொல்லுவினம் .

ஒரு பயிரில் இருந்து பல முறை பயன் பெறுவதுதான் மறுதாம்புப் பயிர்ச்செய்கை .' வடகோவை

' தம்பியா என்ன கோதாரிப் புதினம் எல்லாம் சொல்லுறாய் '

'அதுதானே ! விதானையார் புதுப் புது விசயம் எல்லாம் சொல்லுறார் '

'மறுதாம்பு என்ற பேர்தான் உங்களுக்குப் புதினமாய் இருக்கு , இது எங்கடை

நடமுறையிலை இருக்கிற விடயம்தான் . இப்ப , பொன்னாம்காணி , வல்லாரை , கங்கூன் எல்லாத்தைதையும் .மேலாலை அறுத்தெடுத்துப் போட்டு கீழை வேரை விடுகிறம்தானே . அந்த வேரிலை இருந்து வாற தழையழை திரும்பத்திரும்ப அறுத்து எடுகிறம்தானே இதுவும் மறுதாம்புப் பயிர்ச்செய்கைதான் '

'இலை வகைப் பயிர் செய்கைக்கு உது சரி விதானையார் . நெல்லு , தானியம் தாற பயிரெல்லே'

' நெல்லு மாத்திரம் இல்லை , இறுங்கு , கரும்பு , பருத்தி போன்றவற்றுக்கும் இதைச் செய்யலாம் '

'முதல் விளைச்சல் மாதிரி அதேயளவு விளைச்சல் இதில வருமே '

' நெல்லு , இறுங்கிலை நீங்கள் அப்பிடி எடுக்கேலாது ஆனால் கரும்பிலை பசளை போட்டு , நீர்ப் பாசனம் செய்தால் முதல் விளைச்சல் அளவுக்கு மறுதாம்பிலையும் எடுக்கலாம் ' வடகோவை

'இதிலை என்ன நன்மை விதானையார் ?'

'ஒவ்வொண்டாய் சொல்லுறன் கேளுங்கோ

1 விதை தேவையில்லை

2 பண்படுத்தல் செலவு இல்லை

3 அறுவடைக் காலம் விரைவாய் வரும் '

'பங்கைகனக்கநன்மையிருக்கெண்டிறாய்' 'ஓமண்ணை எல்லாத்தையும் பரீட்சாத்தமாய் ஒருக்காச் செய்து பாக்கிறதுதானே.

என்ரை சிநேகிதப்பெடியன் Karunaharan Krishanthan கீரையை வாங்கி , அதன் மேல் தண்டை ஓடிச்சு கறிக்கு எடுத்துப் போட்டு வேரை நட்டு வைச்சிக்கிறான் அது இப்ப முழுக் கீரையாய் வளந்திருக்கு'

'ஆர் உந்த பொடி மோனை '

'எங்கடை கருணா அண்ணேன்ரை மகன்'

'ரோட்டுக்கரை முகரி வீட்டுக் கருணாவோ'

' ஓமண்ணை . புதுசு புதுசாய் செய்து பாக்கிறார் . அண்டைக்குப் பாத்தன் , லீக்ஸ் வேண்டி , அதன் மேல் பகுதியை கறிக்கு எடுத்துக்கொண்டு வேர் பகுதியை நட்டு முளைக்க விட்டிருக்கிறார் ' வடகோவை

' கீரை வேரை நடுகிற அளவுக்கு சுத்த கசவாரப் பொடியனாய் இருக்கிறான்'

'அப்பிடி பகிடிபண்ணைக் கூடாதண்ணை . புதிய முறைகளைக் கண்டு பிடிக்க காலம் எமக்குக் கற்றுத்தரும் . கீரைப் பிடி 150 ரூபா விக்கேக்கை கிரிசாந் இதை செய்து பார்த்திருக்கிறார் .விவசாயதிலை இப்பிடி புதிய புதிய முறைகளைக் கண்டுபிடிக்க வேணுமண்ணை '

'அப்ப இம்முறை தறையை உழாமல் அப்பிடியே விடட்டே'

'இந்த முறை விட்டு பாருங்கோ . மழையை நம்பிப் பயிர் செய்கிற எங்களுக்கு இந்த மறுதாம்பு நெற்செய்கை எவ்வளவு தூரம் சித்திக்கும் எண்டு தெரியேல்லை . தானியமாய் விளையாட்டிக்கும், முட்டுக்காய்ப் பருவத்திலை அறுத்து மாடுகளுக்கு போட நல்ல தீவனம் கிடைக்குமெல்லே '

'நீ சொல்லுறபடி இந்த முறை செய்து பாப்பம் . மிசின் வெட்டாலை மாடுகளுக்கு வைக்கலும் பத்தாது '

எனது தொலைபேசி சிணுங்கியது . நண்பனொருவன் தமது குளம் பார்க்க அழைத்தான் . சரி நான் அப்ப வரப்போறன் அண்ணை .

' இனி எப்ப வருவியள் விதானையார் ?' இது பர்வதம்மாமி

'நேரம் கிடைச்சால் வாற வெள்ளி வாறன் .

'கடயம் வாங்கோ விதானையார் .சோளம் பொத்தி அவிச்சு வைக்கிறன்'

ஏறு வெயிலில் வியர்த்துக் கொட்டியது . தலை கூட வியர்த்து நனைந்திருந்தது . கைக்குட்டையை எடுத்து தலையைத் துடைத்தேன் .

இதைப்பார்த்த செல்லையர் சொண்டுக்குள் சிரித்தவாறு

'ஏன் மோனை உன்ரை மேல்காணியிலை இப்படி மறுதாம்பு பயிர்ச்செய்கை செய்யேலாதே ' என்று தனது நளினத்தை தொடங்கினார் .

நான் காதில் விழாதவாறு சைக்கிளை ஊன்றி மிதித்தேன் .


# தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

## கட்டணவிபரம்


| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.12.2024இல் வெளியிடப்பெற்றது.